ஸ்ரீ ரமண மஹர்ஷி

114 சித்திரங்கள் அடங்கிய சரித்திரம்



ஸ்ரீ ரமணாச்ரமம்

விலை : அணா எட்டு

முன்னுரை.

ஆறு மாதங்களுக்கு முன் ஆசிரியர் எம். எஸ். காமத் "ஸ்ரீ மஹர்ஷி" என்று ஆங்கிலத்தில் ஒரு சரித்திரம் எழுதினர். ஆசிரியரின் எளிய நடையும், கண்ணைக்கவரும் சித்திரங்களும் மக்கள் மனத்தைக் கவர்ந்தன.

புஸ்தகம் மிகுந்த பிராபல்யமடைந்தது. இந்நூல் அதன் மொழிபெயர்ப்பேயாகும். ஏற்கெனவே ஹிந்தியிலும், தெலுங்கிலும் அதன் மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.

புஸ்தகத்தில் உள்ள சித்திரப்படங்கள் யாவும், ஆஶ்ரமத்தில் பல நாட்கள் தங்கியிருந்த ஸ்ரீ பி. ஆர். சுப்ரமண்யம் என்னும் நண்பரால், ஆங்கில முதனூலுக் கென்றே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டவை.

இக் கைங்கர்யத்தை எனக்கு அன்புடன் அளித்த ஆசிரியருக்கும் உதவி புரிந்த நண்பர்களுக்கும் வந்தனம்.

சென்னை,
ஜூலை '37.

இ. ஆர். கோவிந்தன்
"ஸண்டே டைம்ஸ்"

திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஶ்ரமம், ஸர்வாதிகாரி
நிரஞ்ஜனானந்த ஸ்வாமிகளால் பிரசுரிக்கப்பட்டது.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
12	40	நெல்லையப்பய்மர்	நெல்லையப்பய்யர்
19	21	கபணதி	கணபதி
25	18	மிகுந்த	....
50	12	ஆஸ்	ஆம்
52	3	ஆஸ்	ஆம்
53	9	முறடான	முரடான
54	4	பர்வதாகரமான	பர்வதாகாரமான

ஸ்ரீ ரமண மஹர்ஷி

பாரத நாட்டின் புண்ணிய தினங்களில் ஆருத்ராதரிசனம் மிகவும் விசேஷம் வாய்ந்தது. கௌதமர், பதஞ்சலி போன்ற பக்த சிரேஷ்டர்களுக்கு சிவபெருமான் காட்சி யளித்த இப்புனித நாளன்று, 1879-ம் வருஷம் டிசம்பர் மாதம் முப்பதாம் தேதி இரவு ஒரு மணிக்கு ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அவதரித்தார்.

அவர் பிறந்த ஊர் திருச்சுழி. மதுரை ஜில்லா வில் ஓர் கிராமம். அவரது தந்தை ஸ்ரீ சுந்தரம் அய்யர் கண்ணியமான வக்கீல்தொழில் நடத்தி வந்தார். அவருக்கு மூன்று புதல்வர்கள். இரண்டாவது குழந்தையாகிய ரமணருக்கு வேங்கடராமன் என்று நாம கரணம் செய்தனர். அக்ஷராப் யாசமானதும், குழந்தை வேங்கடராமனை உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். பின்னர், திண்டுக்கல் சென்று ஒரு வருஷம் ஐந்தாவது வகுப்பில் படித்தார். இதற்குப்பின் மதுரைக்குப் போய் ஸ்காட்ஸ் மிடில் ஹைஸ்கூல்களில் சேர்ந்தார்.



பள்ளிப் பிராயத்திலெல்லாம், வருங்காலத்து மகிமையைக்குறிக்கும் அறிகுறிகள் எதுவும் அச்சிறுவரிடம் இல்லை. வகுப்பிலே அபார அறிவுடன் பிரகாசிக்கவில்லை. மகா புத்திசாலி யென்று பேரும் எடுக்கவில்லை. நல்ல, வலுவான உடல் உறுதி உண்டு. இதைத் தவிர மற்றச் சிறுவர்களைவிட எவ்விதத்திலும் அவர் சிறந்து விளங்கவில்லை.

பதினாறு வயது வரை இப்படிப் படிப்பில் கழிந்தது. 1895-ம் வருஷம் நவம்பர் மாதம் ஓர் நாள் அவரது வாழ்வின் முக்கிய சம்பவம் நிகழ்ந்தது.

ஊரிலிருந்து உறவினர் ஒருவர் வந்திருந்தார். "எங்கிருந்து வருகிறீர்?" என்று வேங்கட ராமன் க்ஷேமம் விசாரித்தார். "அருணாசலத் திலிருந்து வருகிறேன் அப்பா" என்று வந்த பதில் அவரை பரவசப்படுத்தியது.

இதற்குமுன் எத்தனையோ தடவை அந்தப் பெயரை அவர் கேட்டிருக்கிறார். ஆனால் இப்போது மட்டும் ஓர் புதிய உணர்ச்சி உண்டாயிற்று. பய பக்தி பொங்கியெழுந்தது.

ஆனால் இந்த உணர்ச்சி நீடித்திருக்கவில்லை. இதன் பிறகு ஓர் நாள் பெரியபுராணப் புஸ்தகம் ஒன்று கிடைத்தது. நாயன்மார்களுடைய திவ்ய சரித்திரங்கள் அவரது உள்ளத்தைக் கவர்ந்தன. ஆயினும் இந்த அனுபவங்கள்கூட அவர் மனத்தில் ஆழப்பதிய வில்லை. கடைசியாக 1896-ம் ஆண்டில்தான் திடீரென ஓர் மாறுதல் ஏற்பட்டது.

ஓர் நாள் வேங்கடராமன் தனது சிறிய தந்தை வீட்டு மாடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். உடலிலே நோய் ஒன்றும் இல்லை. ஆனால் திடீரென்று ஏதோ ஓர்வித பயம் உள்ளத்தில் எழுந்தது. தான் மரணத் தறுவாயில் இருப்பதாகச் சிறுவருக்குத் தோன்றியது. ஆனால் பெரியவர்கள் ஒருவரிடமும் இதை அவர் சொல்லவில்லை. தன் மனத்திற்குள்ளேயே இதைத் தீர்த்துக் [illegible]ள்ளத் துணிந்தார்.

பிற்காலத்தில் இதை விவரிக்கும்போது ஸ்ரீ மஹர்ஷிகளே பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

"திடீரென்று ஏற்பட்ட இச்சம்பவம் என்னை தீவிர யோசனையில் ஆழ்த்தியது 'சரி; சாவு நெருங்கி விட்டது. சாவு என்றால் என்ன? எது சாகிறது? இந்த உடல் தானே செத்துப் போகிறது?' என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டேன். உடனே மரணக் காட்சியை நடிக்கத் தொடங்கி விட்டேன்.



பிறந்து வளர்ந்த வீடு, திருச்சுழி

"பிணம் போல விறைக்குமாறு கை கால்களை நீட்டிப்படுத்தேன். 'சரி; இந்த உடம்பு செத்து விட்டது' என்று உள்ளுக்குள்ளே சொல்லிக்கொண்டேன். இதை மயானத்திற்குக் கொண்டு போய் எரித்து விடுவார்கள். சாம்பராய்ப்போகும். ஆனால் இந்த உடம்பின் முடிவுடன் 'நானும்' இறந்துவிட்டேனா? இந்த உடல்தான் நானா? இந்த உடல் சப்தமற்று, சலனமற்று கிடக்கிறது. ஆனால் இந்த உடலுக்கு மப்பாற்கூட 'நான்' என்ற சொரூபத்தின் சக்தியும், தொனியும் ஒலிக்கிறதே! ஆகவே, 'நான்' தான் ஆத்மா— உடலுக்குள் கட்டுப்படாத ஓர் வஸ்து, என்ற முடிவுக்கு வந்தேன். இதெல்லாம், வெறும் மனத் தோற்றமல்ல. நிதர்சனமான உண்மைச் சம்பவங்கள் போல பளிச்சென்று பட்டது."

இந்த சாதனம் அரை மணிக்குள் நடந்தேறிவிட்டது. மரண பயம் பறந்து போய் விட்டது. "நான் யார்?" என்ற விசாரணையிலேயே அவர் கவனம் எல்லாம் சென்றது.

படிப்பிலே சிறிதும் அக்கரை செல்லவில்லை. வீட்டில் உள்ளவர்களை நினைப்பதில்லை. விளையாட்டுத் தோழர்களையும் மறந்தார்.



திருச்சுழிக் கோவில் உட்பிராகாரம்



திண்டுக்கல் மலைக்கோட்டை. மாலை நேரங்களில் ஆடியோடி விளையாடிய இடம்

வேடிக்கையும், சண்டைகளும் மறைந்தன. எதிலும் பற்று இல்லை. சாந்தமும், வணக்கமும் நிறைந்தவரானார். உணவைப் பற்றிச் சிறிதும் கவலை இல்லை. நல்லதோ, கெட்டதோ கிடைத்ததை, ருசி, மணம் ஒன்றையும் கவனியாமல் சாப்பிடலானார்.

கோவிலுக்குப் போவதிலே புதிய சிரத்தை ஏற்பட்டது. இதற்கு முன்னெல்லாம், எப்போதாவது, ஸ்ரீ மீனாக்ஷியம்மன் சன்னிதிக்குப் போவதென்றால், தமாஷாக, சிநேகிதர்களுடன் போய்விட்டு வருவது வழக்கம். ஆனால் இப்போது அப்படியில்லை! நாள் தவறாது, தனியே கோவிலையடைந்து, அம்மன் சன்னிதியிலாவது ஸ்ரீ நடராஜர்சன்னிதியிலாவது, நீண்ட நேரம் தொழுதுவிட்டு வருவார்.

தந்தை : ஸ்ரீ சுந்தரம் அய்யர்

"ஒவ்வோர் சமயம்," மஹர்ஷிகள் கூறுகிறார், "எனது பக்தியைப் பெருக்கி, அறுபத்து மூவரது அன்பைப் போன்று நிலைத்திருக்க அருள் சுரக்குமாறு இறைவனை இறைஞ்சுவேன். ஆனால் அனேகமாக எதையும் உபேக்ஷித்துப் பிரார்த்திப்பதில்லை. அகவூற்றும் புறவூற்றும் கலக்குமாறு விட்டுவிடுகிறது. இந்த ஹிருதய வாரிதியினால், கண்களில் நீர்த்துளிக்கும். அவ்வளவுதான். இன்ப துன்ப உணர்ச்சி ஒன்றும் கிடையாது."

இவ்வாறு ஆறு வாரங்கள் கடந்தன. வேங்கடராமனின் மாறுதலைக் கண்ட உறவினர்களுக்கு அது பிடிக்காமலிருந்தது ஆச்சரியமல்ல. படிப்பிலும் கவனம் செலுத்துவதில்லையென்று தெரிந்ததும் வெறுப்பும் கோபமும் கொண்டனர். ஆகஸ்டு 29-ம் தேதியன்று விஷயம் முற்றிவிட்டது.

அன்று வேங்கடராமன் நோட்டுப் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு ஒரு பாடம் எழுதிக் கொண்டிருந்தார். ஆங்கில இலக்கணப் புஸ்தகத்தில் உள்ள ஒரு அத்தியாயத்தை மூன்றுதரம் திருப்பித் திருப்பி எழுதிக்கொண்டு வரவேண்டுமென்பது உபாத்தியாயரின் கட்டளை. மூன்றாவது முறையாகப் பாடத்தைக் காப்பி செய்யும்போது, திடீ



மாரியம்மன் தெப்பக்குளம், மதுரை

மதுரை மிஷன் ஸ்கூல்

ரென்று வெறுப்பு உணர்ச்சி தோன்றி விட்டது. புஸ்தகத்தைக் கட்டி மூலையில் போட்டுவிட்டு, கண்ணை மூடித் தியானத்தில் அமர்ந்தார்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அண்ணா நாகசாமி, தம்பியைப் பார்த்து, "இப்படிப்பட்டவனுக்கு இதெல்லாம் என்னத்துக்கடா, அப்பா!" என்று வெறுப்புடன் கேட்டார்.

சில நாட்களாகவே இம்மாதிரிக் கேள்விகள் வேங்கடராமனுக்கு சகஜமாகி விட்டன. இவைகளை யெல்லாம் அவர் பொருட்படுத்துவதே இல்லை. ஆனால் அன்று மட்டும், அக் கேள்வி சுருக்கென்று தைத்தது.

"ஆமாம்; வாஸ்தவம்தானே. எனக்கு இங்கு என்ன வேலை?" என்ற சிந்தனை எழுந்தது.

அதே சமயத்தில், சில மாதங்களுக்கு முன்னே, கேட்ட மாத்திரத்தில் மெய்சிலிர்க்கச் செய்த அருணாசலத்தின் நினைவு வந்தது.



ஸ்ரீ அழகர் கோவில். மதுரைக்கு 12 மைல் தூரத்தில் உள்ளது. பெரியப்பா வீட்டிற்குப் போகும்போது தரிசித்த க்ஷேத்திரம்

உடனே இருந்த இடத்தை விட்டு எழுந்து, "பள்ளிக்கூடத்தில் இன்று ஸ்பெஷல்கிளாஸ்; போய்விட்டு வருகிறேன்," என்று அண்ணனிடம்சொன்னார்.

"அப்படியானால், கீழே போய், பெட்டியைத் திறந்து, ஐந்து ரூபாய் எடுத்துக் கொண்டுபோய் என் காலேஜ் சம்பளத்தையும் கட்டிவிட்டு வா," என்று கூறினார் நாகசாமி.

"இதுவும் தெய்வ கடாக்ஷம் தான்" என்று நினைத்துக் கொண்டு, வேங்கடராமன் அவ்வாறே ரூபாயை எடுத்துக் கொண்டார். பின்னர் "அட்லாஸ்" ஒன்றை எடுத்து ரயில் மார்க்கத்தை குறிப்பாகப் பார்க்கவே மூன்று ரூபாய் போதும் என்று தோன்றியது. உடனே, ஒரு கடிதம் எழுதி, பாக்கி ரூபாய் இரண்டையும் அத்துடன் சேர்த்து, நன்றாகத் தெரியும்படியான ஓர் இடத்தில் வைத்துவிட்டு ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்.



வீரட்டேஶ்வரர் கோவில் மண்டபம்

கடிதத்திலே கண்டிருந்ததாவது :

"நான் என் தகப்பனாரைத் தேடிக்கொண்டு அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பி விட்டேன். இது நல்ல காரியத்தில்தான் பிரவேசித்திருக்கிறது. ஆகையால் இந்தக் காரியத்திற்கு ஒருவரும் விசனப்படவேண்டாம். இதைப் பார்ப்பதற்காக பணமும் செலவு செய்யவேண்டாம். உன் சம்



அறையணிநல்லூர்



வீரட்டேஸ்வரர் கோவில், கீழூர்

பணத்தை இன்னும் செலுத்தவில்லை. ரூ. 2 இதோடு கூட இருக்கிறது.

இப்படிக்கு,

....

கடிதத்தின் வார்த்தைகளில் அவரது மனோநிலை ஸ்பஷ்டமாகப் பிரதிபலிப்பதைக் காணலாம். "நான்" என்ற ஆரம்பம் சில வரிகளுக்கப்பால், ஏதோ ஓர் "இது" வாக மாறி, கடைசியில் கையெழுத்துப் போடுவதற்குக் கூட ஒருவரும் இல்லாமல் மறைந்துவிடுகிறது. அதனால்தான் கடிதம் கையெழுத்தில்லாமலே முடிவடைகிறது.

ரயில்வே ஸ்டேஷனை அடைந்தபோது நேரமாகிவிட்டது. ஆனால், அதிருஷ்டவசமாக அன்று ரயிலும் தாமதமாகவே வந்து சேர்ந்தது. திருவண்ணாமலைக்குச் செல்ல திண்டிவனம்தான் சமீப ஸ்டேஷன் என்று நினைத்துக் கொண்டு அந்த ஊருக்கு ஒரு டிக்கட் வாங்கினார்.



அய்யன்குளம் தடாகம்

புதிதாகப் போட்டிருந்த காட்பாடி லயன் மூலம் திருவண்ணாமலைக்கே ரயில்போவது அவருக்குத் தெரியாது. வண்டியேறிய பின், ஓர் வயதான மௌல்வி சொல்லித்தான் இந்த விஷயம் தெரிந்தது.

விழுப்புரத்திற்கு ரயில் வரும்போது பின்மாலை 3 மணி. பொழுது விடிந்ததும் திருவண்ணாமலைக்கு வழி விசாரிப்பதற்காக ஸ்டேஷனிலிருந்து ஊருக்குள் சென்றார். பசியெடுக்கவே, ஓர் ஹோட்டலில் நுழைந்தார். சாப்பாடு தயாராகக் கொஞ்சம் நாழிகை காத்திருக்க வேண்டியிருந்தது. அந்த நேரத்தை

கீழூர் அக்கிரகாரம். உணவளித்த முத்துக்கிருஷ்ண பாகவதரின் வீடு இடவரிசையில் மூன்றாவது

வீணாக்காமல் தியானத்தில் கழித்தார்.

சாப்பாடானதும், இரண்டணாவை எடுத்து ஹோட்டல்காரரிடம் கொடுத்தார். பையனிடம் மொத்தம் இருப்பதெல்லாம் பத்துக் காலணாதான் என்று தெரிந்ததும், ஹோட்டல்காரர் அந்த இரண்டணாவும் வேண்டாம் என்று அன்புடன் மறுத்து விட்டார்.

இந்தச் சில்லறையைக் கொண்டு அடுத்த ஸ்டேஷன் வரை டிக்கட் வாங்கி, அங்கிருந்து நடப்பதென்று தீர்மானித்துக் கொண்டார். அறையணிநல்லூரை அடையவும், பொழுது அஸ்தமித்து விட்டது. ஸ்வாமி தரிசனம் செய்யலாமென்று கோவிலை அடைந்தார். ஆங்கு ஜகஜ்ஜோதியான ஓர் ஒளி தோன்றியது. விக்கிரகத்திலிருந்துதான் ஜோதி தோன்றுகிறதென்று நினைத்து, ஆனந்தித்து, கர்ப்பக்கிருகத்தினுட் சென்று பார்க்கவும் ஜோதியைக் காணோம். வெளியே வந்து தியானத்தில் அமர்ந்தார். இதற்குள் கோவில் பரிசாரகர் கோவிலைப் பூட்ட வேண்டுமென்று வந்து எழுப்பிவிட்டார்.



ஸ்ரீ அருணாசலர் ஆலய வாசல்

வெளியே வந்ததும் அர்ச்சகரை யணுகி அன்னம் கேட்டார். அவர் கண்டிப்பாகக் கிடையாதென்று கூறிவிடவே, கோவிலிலிருந்து திரும்பும் கோஷ்டியைப் பின் தொடர்ந்து பக்கத்துக் கிராமமாகிய கீழூரையடைந்தார். அப்போதுகூட அர்ச்சகரது மனம் இளகவில்லை. ஆனால் நல்ல காலமாக, கோவில் மேளகாரர், மனமிரங்கி தனது பங்கை அவருக்குப் போட்டுவிடும்படி கேட்டுக்கொண்டார். பிறகு, ஜலம் சாப்பிடுவதற்காக ஓர்

அருணாசலத் தோற்றம்: ரயிலில் வரும்போது தென்படும் காட்சி

சாஸ்திரிகளின் வீட்டில் காத்துக்கொண்டிருக்கும்போது திடீரென்று உணர்வற்று சற்று தூரத்தில் வீழ்ந்தார். கூடியிருந்தவர்கள் மூர்ச்சை தெளிவித்தனர். உணர்வு திரும்பியதும், தரையிலே சிதறிக் கிடந்த அன்னத்தை எடுத்து சாப்பிட்டுத் தூங்கினார்.

அடுத்த நாள் கோகுலாஷ்டமி. தெய்வபக்தி நிறைந்த ஓர் பாகவதர் வீட்டில் அவரை வரவேற்று நல்ல சாப்பாடு போட்டதுடன் நிறைய பக்ஷணங்களும் கொடுத்தனுப்பினார்கள். அவர்கள் காட்டிய அன்பைக்கண்டு



ஆயிரக்கால் மண்டபம்

சற்று மனத்திடம் ஏற்பட்டது. காதுக் கடுக்கனை அடகு வைத்துக்கொண்டு நாலு ரூபாய் கடன் கொடுக்குமாறு வீட்டுக்காரரிடம் கேட்டார். அந்த நல்ல மனிதரும் இதற்கிசையவே ரூபாயை வாங்கிக்கொண்டு ரயிலேறி, செப்டம்பர் மாதம் முதல் தேதி காலை திருவண்ணாமலையை அடைந்தார். ஆவலால் துடிதுடிக்கும் உள்ளத்துடன் ஓடிச்சென்று நேரே கோவிலையடைந்தார். எல்லா வாயிற் கதவுகளும் திறந்திருந்தன. ஆனால், என்ன ஆச்சர்யமோ, அன்று கோவிலிலே கொஞ்சம்

பாதாள லிங்கம்

ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள்

கூடக் கூட்டமில்லை. மனித அரவமே இல்லை. தட்டுத் தடங்கலின்றி மூலஸ்தானத்திற்கும் சென்று, ஸ்ரீ அருணாசலரிடம் தான் வந்திருப்பதை அறிவிப்பதற்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்தது போலும்!

வெளியே வந்ததும், ஊரில் சுற்றித் திரிந்தார். அய்யன் குளத்தருகே வந்ததும், கீழூரில் கிடைத்த பக்ஷணப் பொட்டலத்தை எடுத்து, "இந்தக் கட்டைக்குத் தின்பண்டங்கள் எதற்கு" என்று கூறிக்கொண்டே ஜலத்தில் எறிந்துவிட்டு நடந்தார். "முடி எடுக்க வேண்டுமா" என்று வழியில் யாரோ ஒருவர் கேட்கவே, இதுவும் செய்யவேண்டியதுதான் என்று தீர்மானித்தார். அழகிய கூந்தல் அன்றோடு அழிந்தது.

பால சன்னியாசிக் கோலம்

அணிந்திருந்த ஆடையையும் அவிழ்த்துக் கிழித்தார். ஓர் கௌபீனத்திற்கான துண்டை மட்டும் வைத்துக் கொண்டு, மற்றதையெல்லாம் சுருட்டி, பூணூலையும் அறுத்து, மிச்சமிருந்த ரூபாயையும் சேர்த்துத் தூர எறிந்தார். ஸ்நானம் செய்வது கூட அவசியம் என்று தோன்றவில்லை. நேரே கோவிலுக்குத் திரும்பி ஆயிரக்கால் மண்டபத்தில் அமர்ந்து தவத்தில் ஆழ்ந்தார்.



ஸ்ரீ அருணசலேசர் ஆலயம் உட்பிராகாரம்

ஆனால் வெகு நாட்கள் வரை அங்கிருக்க முடியவில்லை. பால சன்னியாசியின் யௌவனமும் மௌன விரதமும் பலருக்கு ஆச்சரியத்தை விளைவித்தன. அவர் யார், எந்த ஊர், ஏன் இக்கோலம், முதலிய விவரங்களை யறிய ஆவல் கொண்டனர். இது தவிர, விஷமக்காரச் சிறுவர்களுடைய தொந்தரவும் அதிகமாயிற்று. ஆகவே தனிமையான ஓர் இடத்தை நாடினார். கோவிலிலே பாதாள லிங்கம் என்றோர் இருட்டுக் குகையிருந்தது. பட்டப் பகலில் கூட அதற்குள் செல்ல எல்லாருக்கும் பயம். ஆனால் பால சன்னியாசி பாதாள லிங்கத்தையே தெரிந்தெடுத்து, தனிமையான தவயோகத்தில் ஆழ்ந்தார்.



ஸ்ரீ சுப்ரமண்யர் கோவில்

அங்கு எத்தனை தினங்கள் தவங்கிடந்தனரோ, ஒருவருக்கும் தெரியாது. பிறகு ஓர் நாள் பால சன்னியாசி அங்கிருப்பது எப்படியோ வெளியாயிற்று. அந்த யோக நிலைக் காட்சி, கண்டோரை திடுக்கிட்டுத் திகில் அடையும்படி செய்தது. பூர்வம், வால்மீகி முனிவர் தம்மைச் சுற்றிலும் எறும்புப் புற்றுகள் எழுந்து மூடிக்கொண்டதையும் உணராது வருஷக் கணக்காகத் தவம் செய்ததாகக் கூறுவர். பால யோகியின் தவ நிலையும்



இலுப்பை மரம். இங்குதான் சிறுவர்களின் தொந்தரவு அதிகம்



கோவிலில் உள்ள வாஹன மண்டபம்

அதை ஒத்திருந்தது. பாதாள லிங்கத்தின் தவ வலிமையை நிதர்சனமாக உணர்ந்த இருட்டிலே குடியிருந்த ஈ, எறும்பு, பூச்சி சாதுக்கள், அதுமுதல் அவரை மிக மரியாதை

களுக்கு யோக நிலையிலிருந்தவர் சரியான இரையாகக் கிடைத்தார். உடம்பின் கீழ்ப் பாகம் பூச்சி யரித்து, இரத்தமும் சீயும் சேர்ந்து கட்டிக் கிடந்தது. ஆனால் பிராமண சன்னியாசிக்கு இதனால் எவ்விதத் துன்பமும் நேர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனந்த நிஷ்டையில் அசையாது வீற்றிருந்தார்.



கம்பத்திளையனார் கோவில்

யாகக் கவனித்து வருவாராயினர். ஆயினும், பால யோகி அடிக்கடி இடம்மாறிக்கொண்டேயிருந்தார். ஸ்ரீ சுப்ரமண்யர் கோவிலருகே சில காலமிருந்தார். அதன் பக்கத்தில் உள்ள பூந்தோட்டத்தில் சில நாட்கள். இதன் பின் வாஹன மண்டபத்தில் சில தினங்கள். கடைசியாக மங்கைப் பிள்ளையார் கோவிலை அடைந்தார்.

இக்காட்சியைக் கண்டோர் யாவரும் பிரமித்துப் போயினர். பால சன்னியாசியின் மகிமையை உணர்ந்த உத்தண்டி நயினார் என்

பால சன்னியாசியின்



மங்கைப்பிள்ளையார் கோவில்

குருமூர்த்தம் : இங்கு ஒன்றரை வருஷம் வாசம்

னும் சாது, இச்சமயத்தில் ஸ்வாமிகளையடுத்து உபதேசம் பெறவேண்டி, சிசுருஷை செய்யத் தொடங்கினர்.

இப்போது கூட விஷமிகளின் தொந்தரவு நீங்கவில்லை. ஓர் நாள், நயினர் இல்லாத சமயத்தில், யாரோ துஷ்டர்கள் ஸ்வாமிகளின் மீது சிறுநீர் விட்டனர். இதைக் கூட அவர் பொருட்படுத்தவில்லை. ஸ்வாமிகளின் பிரபாவம் நாளுக்கு நாள் எங்கும் பரவவே, பல பக்தர்கள் தரிசனத்துக்கு வந்து போவாராயினர். இதனால் துஷ்டர்களது கொடுமைகள் நின்றன. ஆயினும், பக்தர் கூட்டம் பெருகியதால் தியானத்திற்கு இடைஞ்சல் ஏற்படவே, ஸ்வாமிகள் அதை விட்டுப் புறப்பட்டு திருவண்ணாமலைக்கு அருகே உள்ள குருமூர்த்தத்தை அடைந்து ஒன்றரை வருஷகாலம் சமாதி நிஷ்டையிலிருந்தார்.



இங்குதான் முதன் முதலாக ஸ்வாமிகளின் பூர்வோத்தரம் வெளியாயிற்று. கூட இருந்த பக்தர் ஒருவர் ஓர் நாள் ஸ்வாமிகளுக்கு ஆராதனை செய்ய ஏற்பாடுகள் எல்லாம் செய்தார். ஆனால் ஆராதனைக்குச் சற்று முன், கரியால் எழுதப்பட்டிருந்த சில வார்த்தைகள் சுவற்றிலே தென்பட்டன. "இதற்குத் தொண்டு இதுவே" என்பது அவ்வாக்கியம். "இது" என்பது பக்தர் கொண்டு வரும் உணவைக் குறிப்பதாகும். இதைக் கண்ட பின் ஆராதனை நின்று விட்டது என்று சொல்லத் தேவையில்லை.

ஸ்வாமிகளுக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்பது இதன் மூலம்தான் வெளியாயிற்று. இதன் பின், அவ்வூர் தாலூக்கா ஆபீஸ் சிரஸ்ததாராயிருந்த ஒரு பக்தர் விடாப் பிடியாக ஸ்வாமிகளின் பூர்வோத்தரத்தை அறிய முயற்சித்தார். அதைத் தெரிவித்தால் ஒழிய, தான் அவ்விடத்தை விட்டு நகருவதில்லையென்று சங்கல்பம் செய்து கொண்டார். முடிவில் ஸ்வாமி கீழ்க்கண்டவாறு எழுதிக் காண்பித்தார் :

"வேங்கடராமன், திருச்சுழி"

பக்தருக்கு கடைசிப்பெயர் புரியவில்லை. உடனே ஸ்வாமி பக்கத்திலிருந்த பெரிய புராணப்புஸ்தகம் ஒன்றையெடுத்து, சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளால் பாடல் பெற்ற திருச்சுழியென்னும் திவ்விய ஸ்தலத்தின் பெயரைச் சுட்டிக் காட்டினர்.

இந்த விவரங்கள் விரைவில் நாடெங்கும் பரவி, மதுரைக்கும் எட்டிவிட்டன. ஸ்வாமிகளுக்கு ஆராதனை செய்ய ஏற்பாடு செய்த பக்தரான திருவண்ணாமலைத் தம்பிரான் மதுரையில் உள்ள ஓர் மடத்தில் ஸ்வாமிகளின் மகிமையைக் குறித்துப் புகழ்ந்து பிரசங்கம் செய்தார். இதைக் கேட்ட பையன் ஒருவன் உறவினர்களிடம் ஓடிப்போய், "நமது வேங்கடராமன், திருவண்ணாமலையில், மகா பெரிய சாமியாராய் இருக்கானும்," என்று கூறினன்.

ஸ்வாமிகளின் சிறிய தந்தையான நெல்லையப்பய்யர் உடனே திருவண்ணாமலைக்குக் கிளம்பினர். ஸ்வாமிகளுக்கு அப்போது ஓர் மாந்தோப்

பில் வாசம். அன்னியர்களை அதிகமாக அனுமதிப்பதில்லை. நெல்லையப்பய்யரும் முதலில் ஓர் சீட்டைக் கொடுத்தனுப்பினார். உள்ளே சென்றதும் அவர் கண்டகாட்சி மனத்தை உருக்கியது. பாலிய மைந்தனது மேனி, அழுக்கடைந்து திகழ்ந்தது. தலையிலே நிறைந்த மயிர்கள். கையிலே வளர்ந்த நகங்கள்.



பிராமண சன்னியாசி: பாலியத் தோற்றம்

ஆயினும், நெல்லையப்பய்யர் மனதைத் தேற்றிக் கொண்டார். தங்கள் குடும்பத்திலிருந்து ஒருவன் இவ்வளவு உயர்ந்த ஞான நிலையை அடைந்ததைப்பற்றி அவருக்கு திருப்திதான். ஆயினும், ஊருக்குத் திரும்பி தங்கள் பக்கத்திலிருக்குமாறு வேண்டிக் கொண்டார். ஸ்வாமிகளுடைய சௌகரியங்களைக் குறைவில்லாமல் கவனிக்க ஏதுவாகும் என்று கூறினார். ஆனால் ஸ்வாமிகளிடமிருந்து பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. அவரது அருட்பார்வையில் கூட எவ்வித மாற்றமும் தோன்றிலது.

ஆகவே, சிறிய தந்தைக்கு ஊருக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆளையாவது நேரில் பார்த்தோம் என்ற திருப்தி அவருக்கு. பையன் இனி ஊருக்குத் திரும்புவது கஷ்டம் என்று ஸ்வாமியின் தாயாரான அழகம்மையிடம் அறிவித்தார். ஆனால் பெற்ற தாயின்



விரூபாக்ஷ குகை



முலைப்பால் தீர்த்தம்

மனம் இம்முடிவை அவ்வளவு எளிதில் ஒப்புக் கொள்ளுமா?

ஆகவே, மூத்த பிள்ளை நாகசாமிக்கு லீவு கிடைத்தவுடன் இருவரும் திருவண்ணாமலைக்குப் புறப்பட்டனர். அங்கே பவழக் குன்றில் உள்ள ஓர் பாறையின் மீது ஸ்வாமி படுத்திருந்தார். பார்வைக்கு எவ்வளவோ மாறுதலடைந்திருந்த போதிலும், தன் அருமைக் குழந்தையென அன்னைக்கு உடனே தெரிந்து விட்டது.



ஆயினும், நெல்லையப்பய்யருக்குக் கிடைத்த பதில் தான் அன்னை அழகம்மைக்கும் கிடைத்தது. நாள் தவறாமல் அண்ணனும், அம்மையும், ஸ்வாமியை அடுத்து விடாப் பிடியாக வேண்டினர். அவரது மனதைக் கலைக்க எவ்வளவோ முயன்றனர். அன்னையின் அன்பு முழுவதும் வெளிப்பட்டது. அழுதாள், அரற்றினாள். வேண்டினாள், இறைஞ்சினாள். ஒன்றும் பலிக்கவில்லை. எதற்கும் ஒரே நிச்சலனமான மௌனம்.

ஆனால் பக்கத்தில் உள்ளவர்களுக்கு இது மகா பரிதாபக் காட்சியாக விருந்தது. தாயின் அன்பு அவர்கள் மனத்தைக் கரைத்தது. பெற்றெடுத்த தாய்க்கு ஓர் மறுமொழியாவது கொடுக்கும்படி அவர்களும் சேர்ந்து மன்றாடினார்கள். கடைசியில், ஸ்வாமி ஓர் கடிதத்தில் பின்வரு

சத்குருஸ்வாமி குகை



குகை நமசிவாயர் ஆலயம்

மாறு எழுதிக் கொடுத்தார் :

அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங் கிருந்து ஆட்டுவிப்பன். என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது; நடப்பது என்ன தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆதலின் மௌனமாயிருக்கை நன்று.

இதற்குமேல் தாய் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. நாகசாமியின் லீவு முடிந்ததும் மன வருத்தத்துடன் இருவரும் மானமதுரைக்குத் திரும்பினர்.

அன்னை

இதன்பின் ஸ்வாமிகள் மலைமேல் பல குகைகளில் மாறி மாறித் தங்கி வந்தார். விருபாக்ஷத்தில் இருக்கும்போது, அம்மடத்துத் தலைவர் ஸ்வாமியைப் பார்க்க வருபவர்களுக்கு டிக்கட் வைத்து பணம் சம்பாதிக்க ஆரம்பிக்கவே அதையும் விட்டுக் கிளம்பி, பக்கத்திலிருந்த ஓர் வெளியிடத்தில் தங்கினர். அப்போதும் டிக்கட்டு நின்றபாடில்லை. கடைசியாக, அப் பிரதேசத்தையே நீத்து, தொலைவில் உள்ள மற்றோர் குகையை நாடிச் சென்றார். இதற்குள் டிக்கட்டு வைத்த பக்தர் தனது தவறை யுணர்ந்து க்ஷமிக்கும்படி மன்றாடவே, ஸ்வாமியும் கருணை கூர்ந்து திரும்பினர்.

ஆனால் கோடை காலத்தில் விருபாக்ஷ குகையில் வெயிலின் கொடுமை வெகு உக்கிரமாகத்



மாமரக் குகை



பச்சையம்மன் கோவில்

தாக்கிற்று. ஆள் இருக்க முடியாத உருக்கம். ஆகவே இதைவிட்டு நீங்கி முலைப்பால் தீர்த்தத்திற்கு அருகேயுள்ள மாமர குகைக்கு மாற வேண்டியதாயிற்று.

விருபாக்ஷ குகையில் இருக்கும்போது தான், உள்ளம் மலர்ந்து தெய்வீக பக்தி ததும்பும் ‘அக்ஷர மணமாலை’ என்னும் திவ்விய பாடலை அருளினார். ஸ்வாமிகளை அடுத்துள்ள ஆண்டிகள், பிக்ஷைக்காக ஊருக்குள் செல்லும் போதெல்லாம் இப்பாடல்களைப் பாடி வருவாராயினர்.

இக்காலத்தில் தான் ஆங்கிலம்படித்த சிலரும் ஸ்வாமிகளின் மகிமையை உணர்ந்து அடிக்கடி தரிசனத்துக்கு வரத் தொடங்கினர். இவர்களில் சிலர் ஸ்வாமிகளைப் பற்றியும் அவரது உபதேசங்களைப் பற்றியும் எழுதிக் குறித்து வைத்திருக்கின்றனர். ஸ்ரீ ஜி. சேஷய்யர் என்னும் பக்தரின் சந்தேகங்களுக்கு ஸ்வாமிகள் சிறு சீட்டுக்களில் பதில் எழுதிக் கொடுப்பது வழக்கம். விசார சங்கிரகம் என்னும் நூல் இவைகளைக் கொண்டு தொகுத்ததாகும்.

ஸ்ரீ சிவப்பிரகாசம் பிள்ளை என்னும் பக்தர் “அனுக்கிரக அகவல்” என்று ஓர் நூல் எழுதியிருக்கிறார். அந்தக் காலத்திலேயே ஸ்வாமிகளின் ஆத்மஞான உபதேசம் பக்குவம்



ஸ்ரீ அருணாசலேசர் : உத்சவ மூர்த்தி

ஸ்ரீ கணபதி கோவில்

கோயிலில் உள்ள சிவகங்கைக் குளம்

அடைந்து விட்டதென்பதை, இதில் உள்ள கீழ்க்கண்ட பாகங்கள் நிதர்சனமாகக் காட்டு கின்றன :



"மனமற்ற நித்திரையில் தின மனுபவிக்கும் தன் சுபாவமான அச்சுகத்தை யடையத் தன்னைத் தானறிதல் வேண்டும். அதற்கு 'நானார்?' என்னும் ஞான விசாரமே முக்கிய சாதனம்.

"நானார்? ஸப்த தாதுக்களாலாகிய ஸ்தூல தேகம் நானன்று. சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தமென்னும் பஞ்ச விஷயங்களையும் தனித் தனியே அறிகின்ற ஞானேந்திரியங்களும் நானன்று. வசனம், கமனம், தானம், மலவிசர்ஜனம், ஆனந்தித்தல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்கின்ற கன்மேந்திரியங்களும் நானன்று. சுவாஸாதி ஐந்தொழில்களையும் செய்கின்ற பிராணாதி பஞ்சவாயுக்களும் நானன்று. மனமும் நானன்று. சர்வ விஷயங்களும், சர்வ தொழில்களுமற்று, விஷய வாசனைகளுடன் மாத்திரம் பொருந்தியிருக்கும் அஞ்ஞானமும் நானன்று. மேற்சொல்லிய யாவும் நானல்ல, நானல்லவென்று நேதி செய்து தனித்து நிற்கும் அறிவே நான். அறிவின் சொரூபம், சச்சிதானந்தம்.

"நானார் என்னும் விசாரணையிலேயே மன

ஸ்ரீ அருணசலேசர் ஆலயம் : விரூபாக்ஷ குகையிலிருந்து தோன்றும் காட்சி

மடங்கும்; நானுர் என்னும் நினைவு மற்ற நினைவுகளை யெல்லா மழித்துப் பிணஞ் சுடு தடி போல் முடிவில் தானு மழியும். ஆத்மஞானம் திகழும்."

*   *   *

இதன்பின் மஹர்ஷிகளின் அருளுக்குப் பாத்திரமானவர்களில் முக்கியமானவர் ஸ்ரீ காவ்யகண்ட கணபதி சாஸ்திரிகளாவர். இவரது வரவு பலவிதங்களில் விசேஷம் வாய்ந்தது.

கணபதி முனிவர் மகா பண்டிதர் என்று புகழ் படைத்தவர். பெரிய கவி; வேதாந்தி. பன்னிரண்டு ஆண்டுகள் வரை கடுந் தவம் இயற்றியும் பலன் ஒன்றும் ஏற்படாமல் மனம் வருந்தி நின்ருர். 1897-ம் ஆண்டு ஓர் தினம் திருவண்ணுமலைச்சுற்றிலுள்ள ஓர் மடத்திலே தியானத்தில் ஆழ்ந்திருந்தார். திடீரென்று "பகவான் அழைக்கிருர்" என்று அசரீரி யொன்று அழைப்பது போலத் தோன்றியது. உடனே இருக்கையை விட்டு எழுந்து கோவிலை நோக்கி நடந்தார். வழியிலே சுவாமி புறப்பட்டு ஊர்வலம் வருகிருர். சாஷ்டாங்கமாக விழுந்து அஞ்சலி செய்தார். ஆனுல் அந்த அசரீரி அழைப்பின் அர்த்தம் புலப்படவில்லை.



தாயும் தனயனும்—1914

சஞ்சல மடைந்த மனத்துடன் மறுநாள் மத்தியானம் வரை தெருவிலேயே சுற்றித் திரிந்தார். பிறகு மலைமீதுள்ள ஸ்வாமியாரின் ஞாபகம் வந்தது. உக்கிரமான வெய்யிலையும் கவனியாது உடனே மலையின்மேல் ஏறிச் சென்ருர்.



ஸ்கந்தாஸ்ரமம்

—வசந்த காலக் காட்சி

அதிருஷ்டவசமாக அன்று விரூபாக்ஷ குகையின் தாழ்வாரத்தில் ஸ்வாமிகள் தனியே அமர்ந்திருந்தார். கணபதி முனிவர் சாஷ்டாங்கமாகத் தரையிலே சாய்ந்து தன்னிரு கரங்களாலும் ஸ்வாமிகளின் அடிகளைப் பற்றிக் கொண்டு சரண் புகுந்தார்.

"கற்க வேண்டிய யாவையும் கற்றேன். வேதாந்த சாஸ்திரங்களனைத்தும் பயின்றேன். மனங்கொண்ட மட்டும் மந்திரங்களை ஜபித்தாய் விட்டது. ஆயினும் தபஸ் என்பதின் தாத்பர்யம் தெரியவில்லை. ஐயனே, உனதடியிணைச் சரணடைந்தேன்," என்று இறைஞ்சினர்.



ஸ்வாமிகள் சுமார் பதினைந்து நிமிஷங்கள் வரை கணபதி முனிவரைத் தன் கண்களால் நிச்சலனமாகக் கடாக்ஷித்தார். பின், தனது பதினேராண்டு மௌனத்தை விடுத்து, திருவாய் மலர்ந்தார்:

"நான், நான்" என்பது எங்கேயிருந்து புறப்படுகின்றதோ அதைக் கவனித்தால், மனம் அங்கே லீனமாகும். அதுவே தபஸ்.

"ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணினால், அந்த மந்திரத்வனி எங்கிருந்து புறப்படுகிறது என்று கவனித்தால் மனம் அங்கே லீனமாகிறது. அதுதான் தபஸ்."

இவ்வருள் வாக்கு, இத் திவ்விய உபதேச மொழிகள் கணபதி முனிவரின் ஐயங்கள் யாவையும் தீர்த்துவிட்டன. குகையிலேயே அன்று இரவு வரை தங்கினர். பக்கத்தில் உள்ளவரிடமிருந்து ஸ்வாமிகளின் பெயரைத் தெரிந்து கொண்டதும், ரமண மஹர்ஷிகள் என்பதே ஸ்வாமிக்குப் பொருத்தமான பெயர் என்று வெளியிட்டார். "மறுவிலாக் காட்சிப் பெரியனை இனிமேல் மஹர்ஷியென்றே வணங்கிப் பணிக" என்று பாடி, இனி பகவான் என்றே பக்தர் யாவரும் மகர்ஷிகளை அழைக்கவேண்டும் என்று கூறினர். அன்று முதல் இப்பெயர்கள் நிலைத்துவிட்டன.

மஹர்ஷிகளைச் சேர்வதற்கு முன்னேயே காவ்யகண்டர் பிரசித்தியடைந்தவர். அவரைப் பின்பற்றும் பக்தர்கள் பலர் இருந்தனர். ஆகவே காவ்யகண்டரின் வருகைக்குப் பின் மஹர்ஷிகளின் தரிசனத்துக்கு வருபவர்களின் தொகை அதிகரித்தது. மேலும் இப்போது மௌன விரதமும் இல்லாமல் போகவே, பக்தர்களின் வினாக்களும் அதிகரித்தன. மஹர்ஷிகள் அருளிய விடைகளின் முக்கியமான பாகங்களைத் தொகுத்து, கவிதைகளாக அமைத்து "ரமணகீதை" என்னும் நூலாக வெளியிட்டார் காவ்யகண்டர்.

கபணதி முனிவர் மஹர்ஷிகளிடம் நெருங்கிய அன்பு பூண்டவர். மஹர்ஷிகளிடம் அவர் கண்ட அற்புத சக்திகள் பல.

1908-ம் ஹு காவ்யகண்டர் திருவொற்றியூரில் உள்ள ஓர் பிள்ளையார் கோவிலில் தவம் இயற்றி வந்தார். திடீரென ஓர் இடத்தில் சந்தேகம் தோன்றியது. "மஹர்ஷிகள் அருகிலிருந்தால் இந்த சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இல்லையே!" என்று மனத்தில் நினைத்தார். அந்தக்ஷணமே மஹர்ஷிகள் உள்ளே நுழைவது போலத் தோன்றியது. சாஷ்டாங்கமாக வீழ்ந்து அடிபணிந்தார். மஹர்ஷிகள் தமது திருக்கரத்தால் தலையைத் தொட்டு அமிழ்த்தினர். மின்சாரம் போன்ற புதியதோர் சக்தி தம்முட் புகுந்ததாக முனிவர் உணர்ந்தார். மஹர்ஷிகளின் திருக்கரத்தால் ஹஸ்த தீக்ஷை பெற்றுவிட்டதாக மகிழ்ந்தார்.

இதைப் பற்றிப் பின்னால் மஹர்ஷிகள் கூறிய விவரமும் இதை ஒத்திருக்கிறது. பகவான் அருளியதாவது:

"ஒரு நாள் படுத்துக் கொண்டிருந்தது; ஸமாதியில் இல்லை. திடீரென சரீரம் ஆகாயத்தில் உயர்ந்து கொண்டே சென்றது. சுற்றிலும் உள்ள பொருள்கள் யாவும் மறைந்தன. சுற்றிலும் ஒரே வெண் ஜோதி. பிறகு சரீரம் ஓரிடத்தில் இறங்கியதும் பொருள்கள் புலப்பட்டன. திருவொற்றியூரில் இருப்பதாக ஓர் எண்ணம் உதித்தது. ஒரு பெரிய ரஸ்தாவைப் பின்பற்றிச் செல்லுகையில், கொஞ்ச தூரம் தள்ளி ஒரு கணபதி கோயில் தென்பட்டதும், உள்ளே சென்றது. அங்கு பேசியதுண்டு; ஆனால் என்ன பேசியது, செய்தது என்பது நினைப்பில் இல்லை. திடீரென்று விழித்தபோது விரூபாக்ஷ குகையில் படுத்திருந்தது. இப்படித்தான் ஸித்தர்களும் உலாவுவார்கள் என்று தெரிந்தது."



இதில் ஆச்சரியம் என்னவென்றால் மஹர்ஷிகள் திருவொற்றியூருக்குச் சென்றதே கிடையாது. ஆயினும் மஹர்ஷிகள் சொன்ன அடையாளங்கள் யாவும் காவ்யகண்டர் அச்சமயத்தில் வசித்து வந்த கோயிலுக்குப் பொருத்தமாயிருந்தன.

காவ்யகண்ட முனிவர் மகா மேதாவி. பண்டித சிரோமணி, அறிவிற் சிறந்த கவி. பல பாஷைகளிலும் பாண்டித்யம் அடைந்த புலவர். ஆயினும், மஹர்ஷிகளிடம் உள்ள அபார பக்தியினால், தமது சிறப்பினைத் திற்கும் காரணம் தமது குருதேவரான



பவழக்குன்று: தபஸ்விப் புதல்வனை முதன் முதலில் தாய் தரிசித்த ஸ்தலம்

மஹர்ஷியின் அருளே என்று கூறுவார். அற்புதமான யோக அனுபவங்கள் பல இவருக்கு நேர்ந்தன. 1922-ம் ஆண்டில் மாமரக் குகையிலிருந்து யோகம் செய்யும்போது கணபதி முனிவருக்கு ஓர் நாள் கபாலம் வெடித்து தழும்பும் ஏற்பட்டது.

ஆனால் அந்தோ! உன்னத லக்ஷ்யங்களைக் கொண்ட இப்பெரியார், சிறந்த தபஸ்வி, சீரிய அறிஞர், வெகுநாள் வாழ்ந்திருக்க இந்நாடு பாக்கியம் பெறவில்லை. 1936-ம் ஆண்டு ஜூலை மாதம் இருபத்தைந்தாம் தேதியன்று, கல்கத்தாவை யடுத்த கரக்பூருக் கருகில், நிம்புரா என்னுமிடத்தில் உள்ள ஆஸ்ரமத்தில் பூதவுடலை நீத்தார்.



* * *

அக்காலத்து பக்தர்களில் திருவண்ணாமலையில் சூபர்வைசராயிருந்த ஸ்ரீராமஸ்வாமி அய்யர் என்பவர் ஒருவர்.

பகவானது சன்னிதானத்திற்கு வந்த இரண்டாம் முறையே அவரது உள்ளத்தில் உணர்ச்சி பொங்கியது. சாஷ்டாங்கமாக வீழ்ந்து வேண்டுவாராயினர்:

“ஸ்வாமி, ஏசுநாதர் போன்ற மகான்கள் பாவிகளைக் கடையேற்றவே இவ்வுலகில் தோன்றினர். எளியேனுக்கும் கடைத்தேற வழியில்லையா? உய்வில்லையா?”

“ஆமாம். உய்வுண்டு, வழியுண்டு” என்று ஆங்கிலத்திலேயே விடை கிடைத்தது.

மற்றோர் ரசமான சம்பவத்தைப்பற்றி, ஸ்ரீ அய்யர் தமது டைரியில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

“வெகுநாட்களாக நான் வயிற்று வலிக்காரன். உணவு ஜீர்ணமாவதில்லை; உறக்கமும் கிடையாது. இதைப் பற்றியே சதா கவலை. ஓர் நாள் ஸ்வாமிகள் விசாரிக்கவே, என் உடம்பைப்பற்றிக் கூறினேன். அச்சமயம் தலையெல்லாம் சூட்டால் கொதித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவர் விசாரித்த ஒரு நிமிஷத்திற் கெல்லாம் கொதிப்பெல்லாம் பறந்து விட்டது. மூளை குளிர்ச்சியடைந்தது.

“அன்று ஸௌமிய வருஷம் ஆடி பதினெட்டாம் தேதி. அன்னமும் தோசையும் கொண்டு ஓர் பெண்மணி பகவானுக்கு விருந்தாக அளித்தாள். எனக்கு அப்போது கஞ்சி தான் ஆகாரம். வேறு எதுவும் ஜீர்ணமாவதில்லை. எல்லோரும் என்னையும் சாப்பிடச் சொன்னார்கள். ‘என்னால் ஜீர்ணிக்கமுடியாது’ என்று மறுத்தேன். ஆனால் ஸ்வாமியும் வற்புறுத்தவே, நன்றாக சாப்பிட்டேன். என்ன ஆச்சரியம்! அன்றிரவு தான் அயர்ந்த, சுகமான நித்திரை! ஸ்வாமிகளிடம் பூர்ண நம்பிக்கை உண்டாயிற்று. முதலில் நான் ஸ்வாமிகளிடம் போவதை விரும்பாத என் குடும்பத்தினர் என் பிணி நீங்கியதைக் கண்டதும் பகவான் சந்நிதானத்திற்கே தினந்தோறும் அன்னம் அனுப்ப ஆரம்பித்தனர். ‘அடடா! எத்தனையோ மருந்துகளுக்கு, எவ்வளவோ ரூபாய் செலவழித்தோமே! இதற்கு முன்னடியே அவரது பெருமையை உணராமற் போனோமே’, என்று தோன்றியது.”

எச்சம்மாள் என்று ரமணாஸ்ரமத்தில் அழைக்கப்படும் அம்மணியின் அனுபவங்கள் இதைவிட ஆச்சர்யமானவை.

மிகவும் பரிதாபகரமான நிலையில் இவ்வம்மை ஆஸ்ரமத்தை அடைந்தார். அருமைக் கணவனைப் பறிகொடுத்த துயரம் ஆறும் முன்னர் புதல்வர்களிருவரும் ஆவி துறந்தனர். எச்சம்மாளின் துயரம் சொல்லத்தரமன்று. வீட்டில் வசிக்க மனம் சகிக்கவில்லை. வீட்டைத் துறந்து, தீர்த்த யாத்திரையாக கோகர்ணத்திற்குச் சென்றாள். வடநாட்டிலே பல சாதுக்களையடுத்து தருமோபதேசங்களைச் செவியேற்றாள். ஆனால் மனத்துயரம் சிறிதும் ஆறவில்லை.

இதன் பின் ஸ்ரீ மஹர்ஷிகளைப் பற்றிக் கேள்வியுற்று திருவண்ணாமலையை அடைந்து, மலையின் மீதேறி மஹர்ஷிகளைத் தரிசித்தாள். அவர் அசையாது வீற்றிருந்தார். எச்சம்மாளும், நின்ற விடத்திலேயே அசையாது ஒரு மணி வரை நின்றாள். வாயைத் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஆனால் இம் மௌன தரிசனம் அவளது எண்ணங்களில் ஓர் புரட்சியை உண்டு பண்ணியது. நின்ற இடத்திலேயே வேரூன்றி நின்றாள். பொழுது போய்க்கொண்டிருந்தது. மாலையும் வந்தது. பிறகு, சற்று சமாளித்துக் கொண்டு பிரியாமல் பிரிந்து சென்றாள். மஹர்ஷிகளின் அருளால் தனது துயர் எல்லாம் மறைந்து விட்டதாகக் கூடவந்த தோழியிடம் மகிழ்வுடன் தெரிவித்தாள்.



அன்று முதல் எச்சம்மாள் திருவண்ணாமலையிலேயே வசித்து வருகிறாள். சென்ற முப்பது வருஷங்களாக முதலில் மஹர்ஷிகளுக்கு அன்னம் படைக்காமல், இவ்வம்மை சாப்பிடுவதில்லை. இம்வம்மையின் செல்வமெல்லாம் மஹர்ஷிகளின் கைங்கரியத்திலேயே செலவாகின்றது. மஹர்ஷிகள் மலைமேல் வசித்துவந்த காலத்திலே, எச்சம்மாளின் வீடு ரமண பக்தர்கள் தங்கும் ஓர் சத்திரமாகவே விளங்கியது.

ஞான வைராக்கியத்திலே எச்சம்மாள் மிகுந்த முன்னேற்றமடைந்தவள். அனேகமாக எப்போதும் தியானத்திலேயே ஆழ்ந்திருக்கிறாள்.

* * *

பக்தர்கள் அன்பு இவ்வாறிருப்பினும், மலைமேல் உள்ள சாதுக்கள் பலர் மஹர்ஷிகளின் பெருமையை உணரவில்லை. அறிவாளிகள் சிலர் பகவானின் மகிமையை உணர்ந்தனர். ஆனால் அல்ப புத்தி கொண்டவர்கள் மஹர்ஷிகளின் புகழைக் கண்டு அழுக்காறுற்று விரோதம் பாராட்டத் தொடங்கினர். சிலர் அடாத முறைகளையும் செய்ய முற்பட்டனர்.

ஒருவர் மறைவிலிருந்து திடீரென்று கற்களை யுருட்டி விட்டு மற்றுஞ் சில சாதுக்களை பயமுறுத்தியது போல் மஹர்ஷிகளையும் பயப்படுத்த முயன்றார். மஹர்ஷிகள் மலைச்சரிவில் தனியே உட்கார்ந்துகொண்டிருக்கும்போது, இவர் மேலே ஏறிப்

பெரிய கல் ஒன்றை உருட்டி விடுவார். ஓர் முறை கல் ஒன்று மஹர்ஷிகளின் சமீபத்தில் சென்றது. ஆனல் மஹர்ஷிகளோ கொஞ்சம் கூட அசையவில்லை. மற்ருேர் முறை, மஹர்ஷிகள் இச்சாமியாரை கையுங்களவுமாகப் பிடித்து விட்டார். "விளையாட்டிற்காகச் செய்தேன்," என்று அசட்டுச் சிரிப்புடன் சமாதானம் கூறினர். ஓர் இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏறி உட்கார்ந்தார். அதில் ஓர் வாலிபனும் அவன் மனைவியும் இருந்தனர். சாமியார் அவனிடம் தமது பிரசங்கத்தை அவிழ்த்தார். "பெண் மோகம் பொல்லாதடா," என்று மடமட வென்று அடுக்கினர். வாலிபக் கணவனுக்குக் கோபம் பொங்கி யெழுந்தது. பிரசங்கியாருக்கு செருப்படி கிடைத்தது.

* * *



மற்ருேர் சாதுவின் தொந்தரவு இதைவிட வெகு சங்கடமானது. மஹர்ஷிகள் தன்னுடைய சிஷ்யன் என்றும், தான் அவருடைய குருவென்றும் வருபவர்கள் எல்லோரிடமும் கூறிக்கொண்டு ஏமாற்ற ஆரம்பித்தார். மஹர்ஷிகள் அப்போது மௌனம். பேசுவதேயில்லை. ஆகவே சாதுவின் ஏமாற்று வித்தை வெகு தூரம் வெற்றி யடைந்து வந்தது என்றே கூறவேண்டும். ஸ்வாமியாருக்கும் வரவர அகங்காரம் அதிகமாகி வந்தது. ஓர் நாள் அகந்தை மிகுதியால், மஹர்ஷிகளின் மீது காறி எச்சிலை உமிழ்ந்தார். இதையும் அவர் பொருட்படுத்தவில்லை. எப்போதும் போல அசைவற்று உட்கார்ந்திருந்தார். ஆனல் இச்செய்தியைக் கேட்ட பக்தர்கள் ஆத்திரமடைந்தனர். சாது ஓட்டமெடுத்தார்.

ஆனல் ஓடியும் தண்டனைக்குத் தப்ப முடியவில்லை. ஸ்டேஷனிலேயே தகுந்த மரியாதை கிடைத்தது. காஷாயமணிந்த அச்சாமியார் ரயிலுக்குச் சென்று கௌரவமாக

அங்கிருந்து தப்பி, தனிமையாக உட்கார்ந்து கொண்டிருந்த மஹர்ஷிகளிடம் திரும்பி வந்தார் சாது.

"ஸ்டேஷனில் எனக்கு நடந்ததெல்லாம் தெரியுமா?" என்று கேட்டார்.

"ஆம்," என்று விடை கிடைத்தது.

"பார்த்தாயா, இந்த அனுபவமும் வேண்டியதுதான்'' என்று சொல்லிவிட்டுச் சிறிது யோசனை செய்தபின் :

" நான் உன் முகத்தில் துப்பினது பிசகுதான். கோபத்தால் செய்து விட்டேன். இப்போ, பதிலுக்குப் பதில், எத்தனை தடவை வேண்டுமானாலும் என் முகத்தில் துப்பு,'' என்று கூறினர்.



மஹர்ஷிகள் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லையென்று சொல்லத் தேவை இல்லை.

இந்தச் சாமியாரின் தொந்தரவு சில நாட்கள் இல்லாதிருந்தது. பிறகு மறுபடியும் சேஷ்டைகள் ஆரம்பித்து விட்டன. ஆனால் நல்ல காலமாக, யோகானந்தர் என்ற வயோதிகத் துறவி யொருவர் திருவண்ணாமலைக்குத் திரும்பிவந்தார். இவரைத்தான் துஷ்டசாமியார் தமது குருபோற் கருதியிருந்தார். யோகானந்தருக்கு மஹர்ஷிகளிடம் மட்டற்ற மரியாதை உண்டு. ஆகவே துஷ்டசாமியாரின் தொல்லை அதன் பிறகு இல்லை.

இதைத் தவிர இன்னும் சில பண்டாரங்களும் கொடுமை விளைவிக்கத் தொடங்கினர்.

ஓர் நாள் இரவு, பட்டை பட்டையாக விபூதி யணிந்த சாமிக்கூட்டமொன்று திடீரென்று விருபாக்ஷ குகைக்குள் புகுந்து, மஹர்ஷிகளைச் சூழ்ந்துகொண்டு ஆவேசம் கொண்டவர் போலப் பாடத் தொடங்கியது :

அதிமகிமை ஸித்தரடா அகத்தியனார்
விடுத்த
பொதிகைமலை ஸித்தரடா பூலோ
கம் வந்தோம் !
வாராயுன் னுப்பகற்றி வல்லமைக
ளீவோம் !
சீரங்கஞ் சென்றங்கே ஸித்தரொடும்
போவோம்.
குறுமுனிவர் முறைப்படியே
கொடுத்திடுவார் தீக்ஷை !
உறுதியுடன் கண்டிடுவாய் உண்மை
யான காட்சி !

பொறுமையின் பூஷணமான மஹர்ஷிகள் எப்போதும் போல சாவதானமாக வீற்றிருந்தார். ஆனால் பக்கத்திலிருந்த பக்தர்களில் ஒருவர் வெகு சாதுர்யமாக பண்டாரக் கூட்டத்திற்குச் சரியான பதில் கொடுத்து அனுப்பினர்.

" வாரீர் ஸித்தர்களே,'' என்று வரவேற்று, " நீங்கள் வருவதாக முன் கூட்டியே பொதிகையிலிருந்தும் செய்தி கிடைத்தது. வந்ததும் உங்களை யெல்லாம் அண்டாக்களில் அடைத்து வேக வைக்கவும் உத்தரவு வந்திருக்கிறது, என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

இதோடு நிறுத்தாமல், மற்றோர் பக்தரின் பெயரை உரக்கக் கூப்பிட்டு, "இவர்களை வேக வைக்க ஒரு பெரிய கோட்டையடுப்பு வெட்டு, சீக்கிரம்!" என்று உத்தரவிட்டார்.

கள்ளனுக்குச் சரியான குள்ளன் என்பது போல் தங்கள் தந்திரம் பலிக்காமல் போகவே கஞ்சாவெறி கொண்ட பண்டாரங்கள் பதில் பேசாமல் மறைந்து விட்டனர்.

இந்தச் சமயத்தில் முதன் முதலாக ஸ்ரீ எப். எச். ஹம்ப்ரீஸ் என்னும் ஐரோப்பியர் மஹர்ஷிகளை அடுத்தார். 1911-ம்ஆண்டு முதல்போலீஸ் சூபரிண்டெண்டாக வேலை பார்த்தபோதிலும், மிகுந்த மதப்பற்று மிகுந்தவர். பூர்வ ஜன்மத்தில் தாம் ஓர் ஷிர்த கோஷ்டியில் சேர்ந்திருந்ததாக இவருக்கு ஓர் நம்பிக்கை.

ஸ்ரீ ஹம்ப்ரீஸ் மஹர்ஷிகளை மும்முறை சந்தித்து, நடந்த சம்பாஷணைகளை எழுதி இங்கிலாந்தில் உள்ள நண்பர் ஒருவருக்கு அனுப்பினார். "இண்டர்நேஷனல் ஸைக்கிக் கெஜட்" என்ற பத்திரிகையில் இவை பிரசுரமாயின.

இதன் பின் சில காலத்திற்கெல்லாம், ஸ்ரீ ஹம்ப்ரீஸ் தமது வேலையை ராஜினமா செய்து விட்டு கத்தோலிக்க சன்னியாசி யாகிவிட்டார். இவர்கள் சம்பாஷணைகளிலுள்ள சில பாகங்களைக் கீழே காணலாம்:

ஹம்ப்ரீஸ்: உலகிற்கு என்னால் ஏதேனும் உதவி செய்யக்கூடுமோ?



யோகி ராமய்யா

ஸ்ரீ டி. வி. கபாலி சாஸ்திரி

மஹர்ஷி: முதலில் உனக்கு உதவு; அதன் மூலம் உலகிற்கே உதவி உண்டு.

ஹம்ப்ரீஸ்: உலகிற்கு சேவை செய்ய நான் விரும்புகிறேன். செய்யலாமல்லவா?

மஹர்ஷி: ஆஹா, செய்யலாம்; உனக்கு உதவி செய்து கொள்வதன்மூலம், உலகுக்கே உதவி செய்தவனாகிறாய். நீ இருப்பது உலகில் தானே? நீதான் உலகு. உலகத்தினின்றும் நீ வேறு அல்ல; உலகமும் உன்னின்றும் வேறுபட்டதன்று.



பக்தர் கோஷ்டி: 1921 ஜயந்தி

ஹம்ப்ரீஸ்: பெரியோய், பூர்வம் ஸ்ரீ கிருஷ்ணன், ஏசு போன்றோர், பல அற்புதங்களைச் செய்தனர். என்றாலும் அவ்வாறு செய்ய முடியாதா?

மஹர்ஷி: அற்புதங்களை நிகழ்த்திக் காட்டும் போது, இவர்களில் யாராவது, இயற்கைக்கு மாறுபட்ட ஆச்சரியங்களை செய்கிறோமென்று உணர்ந்தா செய்தார்கள்?

ஹம்ப்ரீஸ்: (சிறிது யோசனை செய்த பின்), இல்லை, பெரியோய்.

இதன் பின் சித்து விளையாட்டு சக்திகளை



எச்சம்மாள்



ஆஶ்ரமத்தின் பசுக்கள்

அடைவதை மோகித்து மோசம் போகாமல் ஆத்ம விசாரத்தின் மூலம் முக்தியடையும் மார்க்கத்தைத் தேடுமாறு மஹர்ஷிகள் அவருக்கு உபதேசித்து அருளினார்.



* * *

முதல் தடவையிலேயே மஹர்ஷிகள் தமது அன்னையிடம் குடும்ப பாசம் அற்றுவிட்டதென அறிவித்து விட்ட போதிலும், அவ்வம்மையார் அடிக்கடி திருவண்ணாமலைக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்.

1914-ம் வருஷத்தில் ஓர் தடவை அன்னை உடல் நலம் குன்றி இரண்டு மூன்று வாரம் வரை படுத்த படுக்கையாக விருந்தார். மஹர்ஷிகளுக்கு அப்போது விரூபாக்ஷ குகையில் வாசம். வியாதியுற்ற அன்னையை மஹர்ஷிகள் வெகு அன்புடன் பராமரித்து சிசுருஷை செய்தார். குணப்பட்டவுடன் அழகம்மை மானாமதுரைக்குத் திரும்பிச் சென்றார்.



ஸ்ரீ மஹர்ஷிகளுடன் செல்லம் கொஞ்சும் லக்ஷ்மி

ஆனால் வெகு சிக்கிரத்தில் திருவண்ணாமலைக்குத் திரும்பிவரும்படி நேரிட்டது. 1900-ம் ஆண்டில் அம்மையாரின் ஜேஷ்ட புத்திரன் மரணமடைந்தார். மைத்துனரும் காலம் சென்றார். பிரிவினையாகாத ஏக குடும்பம் ஏழ்மை நிலையை அடைந்தது. பின்னர் கடைசிக் குமாரனான நாகசுந்தரத்தின் இள மனைவியும், ஓர் ஆண் மகவை விட்டு விட்டுப் பரகதியடைந்தாள். இப்படிப்பட்ட பெரும் வியா



மஹர்ஷிகள் : முயலுடன்

குலங்கள் அடுத்தடுத்து ஏற்படவே அன்னையின் மனம் அழன்றது. வீட்டைத் துறந்த இரண்டாவது புதல்வன்மீது மனம் சென்றது. 1916-ல் திருவண்ணாமலைக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

இதன் பின் கொஞ்ச நாளைக்கெல்லாம், மஹர்ஷிகள் ஸ்கந்தாஸ்ரமத்திற்கு மாறினார். அது சற்று விசாலமான இடம். இங்கு வந்த பின் அன்னை சமையல் கைங்கர்யத்தைத் தானே மேற்கொண்டு தரிசனத்துக்கு வந்த பக்தர்களுக்கும் அன்னமிடலானாள். சில நாளைக்கெல்லாம் அன்னையின் விருப்பத்திற்கிணங்க, கடைசிக் குமாரரும் ஆஸ்ரமத்துக்கு வந்து சேர்ந்தார்.

அதிதிகள் அனைவருக்கும் அன்னம் படைக்கும் வழக்கம் இதன்பின் தான் ஆஸ்ரமத்தில் ஏற்பட்டது. நாளுக்குநாள் பக்தர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே வந்தபோதிலும் இவ்வழக்கம் இன்றும் குறைவில்லாமல் நடந்து வருகிறது.

அழகம்மையார் 1916-ம் ஆண்டில் ஆஸ்ரமத்தில் சாசுவதமாகத் தங்கும் எண்ணத்துடன் வந்ததும், பக்தர்கள் பலர் கலக்கமடைந்தனர். "மஹர்ஷிகளுக்கு இது பிடிக்காது; திடீரென்று எங்காவது வேறு ஓர் இடத்திற்கு நடந்து விடப்போகிறார்," என்று அச்ச

முற்றனர். ஆனால் நல்ல வேளையாக, இம்மாதிரியான முடிவு ஒன்றும் ஏற்படவில்லை.

ஆயினும் கொஞ்ச நாள்வரை அன்னைக்கு இடம் பழகவில்லை. மஹர்ஷிகளின் போக்கு அவருக்கு விசித்திரமாகத் தோன்றியது. மற்ற பெண் பக்தர்களிடம் மஹர்ஷிகள் சகஜமாகப் பேசுவார். தாயினிடம் பேசுவதில்லை. அன்னைக்கு இதைக் கண்டு மனத்தாங்கல் ஏற்பட்டது இயற்கையே. ஆனால் வெகு சீக்கிரத்தில் இதன் அர்த்தத்தை அழகம்மையாரே உணர்ந்து கொண்டார். "ஆஸ்ரமத்தில் உள்ள எத்தனையோ பேரில் அன்னையும் ஒருவர்—அவ்வளவு தான். மஹர்ஷிகளின் தாய் என்பதற்காகத் தனி உரிமைகள் ஒன்றும் அவருக்குக் கிடையாது," என்ற உண்மை புலப்பட்டது.



இப்படிப்பட்ட சிறு சம்பவங்களைக் கொண்டே மஹர்ஷிகள் தமது மாதாவின் மனத்தை ஞானமார்க்கத்தில் பக்குவப்படுத்தி, முழு முக்தியான சமாதி நிலைமைக்குத் தயாராக்கினார். தமது பேச்சு, நடத்தை, மௌனம், முதலியவை மூலம் தாயின் ஞான வாழ்வைச் செம்மையுறச் செய்தார். அரிய உபதேசங்கள் புரிவார். உண்மை நிறைந்த கதைகளைச் சொல்லுவார். லௌகிக உலகில் நீடித்த வழக்கத்தினால் ஏற்பட்ட வைதிக ஆசாரங்களில் உள்ள மூட நம்பிக்கைகளை சிறிது சிறிதாக மாற்றவும் முற்பட்டார். ஆனால் கட்டாயப்படுத்துவது கிடையாது. ஒரே யடியில் அர்த்தமற்ற ஆசாரங்களைக் கைவிடும்படி கண்டிப்புச் செய்வதும் இல்லை. சிறிய, சிரிப்புச் செய்கைகளினாலேயே இவைகளை விலக்கி வெற்றி பெற்றார்.

"அடடா, உன் புடவையை யாரோ தொட்டு விட்டார்களே! ஐயையோ, தீட்டு, தீட்டு! மடி கெட்டுப் போச்சே! போச்சு ஆசாரம்; போச்சு பக்தியெல்லாம்: மோக்ஷத்துக்குக் குறுக்கே நிற்பதெல்லாம் இதுதான்," என்று சிரிப்பார்.

அழகம்மாளின் அந்திய காலத்தின் ஆறு வருஷங்கள் இவ்வாறாகக் கழிந்தன. முடிவு நெருங்க நெருங்க, அன்னையும் முனிவரிடம் பூர்ண நம்பிக்கை வைத்து அனைத்தையும் தத்தம் செய்து விட்டதால், மஹர்ஷிகளும் பக்கத்திலிருந்து பூர்ணமான ஞானத்தைப் புகட்ட ஏதுவாயிருந்தது.

1922-ம் வருஷம் மே மாதம் 19-ம் தேதியன்று தான் அன்னையின் ஆவி முடிவுறும் நாள். மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்குகிறது. அன்னையின் மார்பில் வலக்கையையும், இடது கையைத் தலையிலும் வைத்துக் கொண்டு மஹர்ஷிகள் நாள் முழுதும் கண் கொட்டாது உட்கார்ந்திருந்தார். இரவு எட்டு மணிக்கு பிராணன் நீங்கியது. அன்னையின் ஆத்மாவும் பூதவுடலை நீத்து, புனிதமான அருட்சோதி ஆனந்தத்தில் கலந்தது.

அன்றுதான் அன்னையின் கடைசி நாள் என்று தெரிந்ததும், பக்தர்கள் பலர் மத்தியானம் சாப்பிடவேயில்லை. ராத்திரி மறுபடியும் சமையல் ஆயிற்று. ஆனால் மஹர்ஷிகள்

சாப்பிடக்கூட எழுந்திருக்கவில்லை. மூச்சு அடங்கி, அன்னை மாண்டபின்தான், மஹர்ஷிகள் எழுந்தார். குரலிலே எவ்விதமான கவலையும், தழதழப்பும் இல்லை.

“இனி நாம் சாப்பிடலாம், வாருங்கள். தீட்டும் இல்லை, ஒன்றும் இல்லை!” என்று அழைத்து எப்போதும்போல பக்தர்களுடன் உட்கார்ந்து சாப்பிட்டார்.

இரவு முழுவதும், இரு சகோதரர்களும் பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டே விழித்திருந்தனர்.



மறுநாட் காலை ஈமச் சடங்குகள் தொடங்கின. உறவினர் வந்தனர். ஆயிரக் கணக்கான பக்தர்களும் வந்து கூடினர். ஸ்வாமியும் அவர்களில் ஒருவர் போலவே தோன்றினர். உடலை அலங்கரித்து மலைக்கு அப்பால் உள்ள பாலி தீர்த்தம் என்னுமிடத்திற்கு எடுத்துச் சென்றனர். ரஸ்தாவிற்கப்பால் ஒரு குழி தோண்டி மாதாவின் மேனியை வைத்தனர். மூட்டை மூட்டையாக விபூதி, கற்பூரம், உப்பு முதலியவற்றைக் குவித்து அடக்கம் செய்தனர். பின்னர் அதை சமாதியாகக் கட்டி, ஓர் லிங்கத்தை ஸ்தாபித்தார்கள். மாத்ரு பூதேஸ்வரர் என்ற பெயருடன் இன்றைக்கும், சமாதிக்கு தூபதீப நைவேத்தியங்கள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வோர் வருஷமும் வைகாசி மாதம், கிருஷ்ணபக்ஷம் நவமி திதியில் மாதாவின் வருஷாப்திகம் மகா பூஜை யென்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

மகா பூஜையின் உட்கருத்து பின் வருவனவற்றால் நன்கு விளங்கும் :

சிலநாள் சென்றபின் ஒருவர் அன்னை போய் விட்டதைப் பற்றி பிரஸ்தாபித்தார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த மஹர்ஷி குறுக்கிட்டு, “இல்லை. போய்விட்டாளாவது ?.... கலந்து கொண்டாள். அவ்வளவு தான்” என்று கூறினார்.

மற்றோர் முறை மஹர்ஷிகள் கூறியதாவது: “ஆமாம்! அவளிடம் இது பலித்தது. இதற்கு முன் ஒரு தடவை, வேறு ஒருவரிடம்—முடிவு நெருங்கும் போது — இதே முறையைக் கையாண்டேன். ஆனால் காரியம் சித்திக்கவில்லை. கண்ணைத் திறந்து ஒரு விழி விழித்தார். பிராணன் போய்விட்டது.”

அன்னை இதய கமலத்திலும், உச்சிக் கமலத்திலும் கரங்களை வைத்துக் கொண்டிருந்த அந்த பத்துப் பன்னிரண்டு மணி நேரத்தில் நேர்ந்த சம்பவங்களைக் குறித்து மஹர்ஷிகள் சொல்லியிருப்பதாவது:

“இயற்கையாய் அமைந்த எண்ணங்களும், பூர்வ ஜன்ம வாசனையும், மறுபிறப்பில் கொண்டு சேர்க்கும் பூர்வ ஜன்ம அனுபவங்களும் வெகு துரிதமாக வேலை செய்தன. வெளி உலகத்தின் அறிவு மங்கி விட்டதால், சூக்ஷ்ம நிலையிலே ஒவ்வோர் காட்சியும் அவள் முன்பு அடுத்தடுத்துத் தோன்றி மறைந்தது. அந்த ஆத்மா எத்தனையோ விதமான அனுபவங்களில் ஆழ்ந்து வெகு வேகமாகக் கடைத்தேறிச் சென்றது. அச்சமயத்தில் கொடுத்த ஹஸ்த

தீக்ஷையின்றேல், இவைகளுக்காக எத்தனையோ ஜன்மங்கள் எடுக்க வேண்டியிருந்திருக்கும். கடைசியாக, ஆத்மாவானது பல பல சூக்ஷ்ம சடலங்களைக் களைந்தெறிந்து, அஞ்ஞான நிலையை முடிவாகக் கடந்து, மீளாத நித்தியானந்த நிலையான நிர்வாண சமாதியை அடைந்தது.''



இவ்வார்த்தைகளின் அர்த்தம் ஆஸ்ரமத்தின் புனிதமான, தெய்விக மணம் கமழும் காக்ஷியையும், அன்னையின் சமாதியின் மீது மஹர்ஷிகள் கொண்டுள்ள பக்தியையும் உணர்ந்தோர்க்கு நன்கு புலப்படும்.

மலையில் உள்ள ஸ்கந்தாஸ்ரமத்திலிருந்து மஹர்ஷிகள் அடிக்கடி சமாதிக்குப் போய் வருவது வழக்கம். ஓர் நாள் திடீரென்று அங்கு உட்கார்ந்து விட்டார். அன்று முதல் அங்கேயே தங்கலானார். இந்த ஸ்தலமே இன்று தற்போதுள்ள ஆஸ்ரமமாக விளங்குகின்றது.

"ஸ்வயேச்சையாக ஸ்கந்தாஸ்ரமத்தை விட்டு வரவில்லை. ஏதோ ஒன்று என்னை இங்கு கொண்டுவந்து இருத்திற்று. ஈஸ்வராஜ்ஞை. இது ஸ்வயேச்சை, அன்று. இது பர இச்சை, பிறருடைய இஷ்டம், ஆண்டவனின் அருள்.''

இது முதல்தான் அவரது சரித்திரத்தின் புதிய சகாப்தம் ஆரம்பமாகிறது. அன்று முதல்தான், இப்பெரியோரின் உபதேசம் நாடெங்கும் பரவி, இந்தியாவிற்கும் அப்பால் சென்று புகழ் கொள்ளத் தொடங்கியது.



ஆஸ்ரம வாயில்



பாலி தீர்த்தம்

ஓர் சமயம் மஹார்ஷிகள், “அவள் எங்கு போய் விட்டாள்? எங்கும் போகவில்லை; இங்குதான் இருக்கிறாள்,” என்றார். பந்தமற்ற ஆத்ம சொரூபத்திலே, அன்னை தன்னுடன் இன்னும் இருந்து வருகிறாள் என்பதே இதன் பொருள் என்று பலர் தாத்பர்யம் கொண்டனர். இது உண்மையாயின், மஹார்ஷிகளின் உபதேசங்கள் பரவுவதற்கு, (சிவம் சக்தி யென்ற கொள்கைக் கிணங்க,) தேவையாயிருந்த பெண்பாலாகிய சக்தியை அன்னை சமாதியடைந்த பின் அளித்து வருகிறார் என்று ஏற்படும்.

* * *

முதன் முதலில் மஹார்ஷிகள் இங்கு வந்த போது சிவலிங்கத்தை மட்டும் மூடும் ஒரு

குடிசை தானிருந்தது. கொஞ்ச நாளைக்குப் பின் கூரைக் கட்டிடங்கள் ஏற்பட்டன. நல்ல வேளையாக, தண்ணீர் வசதியும் கிடைத்தது. இது ஒரு ஸ்வாரஸ்யமான விஷயம்.

அன்னை

அன்னையை அடக்கம் செய்த சில நாளைக் கெல்லாம், பக்தர்கள் ஜலத்தைத் தேடி யலைந்து கொண்டிருந்தனர். மஹார்ஷிகள் அவர்களுக்கு பக்கத்தில் உள்ள ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினார். மண்ணைக் கிளறி இரண்டு மூன்று அடி ஆழம் தோண்டுவதற்கு முன், வற்றாத ஓர் இனிய ஊற்றுத் தென்பட்டது. இதன் பின் தண்ணீர் வசதிக்குக் குறைவேயில்லை.

தற்போது மஹார்ஷிகள் எப்போதும் வீற்றிருக்கும் மண்டபம்தான் முதன்முதலாக ஏற்



யோகி ராமய்யாவுடன் மலைமேல் ஏறும்போது எடுத்த படம். புறத்தே ஆச்ரமக் காட்சி

பட்ட செங்கல் கட்டிடம். இதைக் கட்டுவதற்குச் சற்று முன்னல், ஆஶ்ரம வாசிகள் ஓர் கடும் சோதனைக்கு உள்ளாயினர்.

ஏராளமான பக்தர்கள் பல விதமான காணிக்கைகளுடன் வந்து செல்வதைக் கண்ட சில தீயர்கள், ஆஶ்ரமத்தில் நிரம்பப் பணம் இருக்கும் என்று எண்ணினர்கள். சரியான கொள்ளை என்று தீர்மானித்து 1924-ம் வருஷம் ஜூன் மாதம் 26-ம் தேதி யன்று, மூன்று திருடர்கள் கொள்ளை யடிக்கப் புறப்பட்டனர். மஹர்ஷிகளும் மற்றவர்களும் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். மணி 11-30.



போஜனம்

முதலில் திருடர்கள் ஜன்னல் கண்ணுடிகளை உடைத்து துவம்சம் செய்தனர். மஹர்ஷிகள் விழித்துக் கொண்டார். "எடுத்துப் போவதற்கு, இங்கு என்ன இருக்கிறது? வேணுமானல் தாராளமாய் உள்ளே வந்து, வேண்டும் என்கிறதை யெல்லாம் எடுத்துச் செல்லலாமே! கதவும் திறந்து தான் இருக்கிறது," என்று திருடர்களிடம் சாவதானமாய் கூறினர். ஆனல் திருடர்கள் இதைச் சட்டை செய்யாமல், ஜன்னல் சட்டங்களைப் பெயர்க்கத் தொடங்கினர். இதைக் கண்ட ஆஶ்ரம வாசிகளுக்கு ஆத்திரம் பொங்கியது. இவர்களில் சிலர் நல்ல தைரியசாலிகள். திடமான சரீர வலுவும் கொண்டவர்கள். வெளியே போய், திருடர்களைப் பிடித்து அடித்துக் கட்டிப்போட்டு வருகிறோமென்று புறப்பட்டனர். ஆனல்





முப்பது வருஷகாலமாக ஸ்ரீ மஹர்ஷிகளுக்கு அன்னம் படைத்தபின் தான் சாப்பிடுவதென்ற அன்புப்பணியை மேற்கொண்டுள்ள பக்தர்களிருவர்—முதலியார் பாட்டியும், மருமகளும். (வலது புறம்), அன்ன தானம்

மஹர்ஷிகள் இவர்களை சாந்தப்படுத்தி ஹிதோபதேசம் செய்தார்.

"வேண்டாமப்பா, வேண்டாம். திருடர்கள் தங்கள் தர்மத்தைச் செய்கிறார்கள்! நாம் நமது தர்மத்திலிருந்து தவறக்கூடாது. அவர்கள் இஷ்டப்படி செய்யட்டும். நாம் தான் பொறுமையுடன் சாந்தமாயிருக்கவேண்டும். அவர்கள் காரியத்திற்கு ஒன்றும் இடைஞ்சல் செய்ய வேண்டாம்" என்று தடுத்து விட்டார்.



மலைச்சரிவில்: கூடவிருப்பது இரு ஐரோப்பிய பக்தர்கள்

ஆகவே, பக்தர்கள் மீண்டும் திருடர்களிடம் வேண்டிக்கொண்டனர். "கட்டிடத்தைச் சின்னப்படுத்த வேண்டாம். உள்ளே நுழைந்து வேண்டியதை எடுத்துச் செல்லுங்கள்," என்று கூறினர். ஆனால் முரடர் காதில் இது ஏறவில்லை. குடிசைகளை யெல்லாம் தீ வைத்துக் கொளுத்தி விடுவதாகப் பயமுறுத்தினர்.

"தயவு செய்து அப்படிச் செய்யவேண்டாம். நாங்கள் எல்லாம் வெளியே போய் விடுகிறோம். நீங்கள் இஷ்டம் போல், தாராளமாக உள்ளே நுழைந்து வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்," என்று மஹர்ஷிகள் கூறினர்.

இந்த யோசனைக்கு திருடர்கள் சம்மதித்தனர். உடனே மஹர்ஷிகளின் முதல் கவனம் நோயுற்றிருந்த கருப்பன் என்ற நாயைக் காப்பாற்றுவதிலேயே சென்றது. திருடர்கள் அடித்துப் போட்டு விடுவார்கள் என்று நினைத்து, கருப்பனை ஓர் பத்திரமான இடத்திற்கு அப்புறப்படுத்தி



ஸ்நானத்திற்கு புறப்பாடு



பக்தர்களின் குடிசைகளில் ஒன்று

விட்டு, கூடவிருந்த மூன்று பேருடன் கூடத்தை விட்டு வெளி யேறினார்.

வாசலைத் தாண்டும் போது ஒவ்வொருவருக்கும் பலமான அடி விழுந்தது. மஹர்ஷிகளையும் இடது துடையில் அடித்தனர். உடனே அவர் அந்த இடத்திலேயே நின்றுகொண்டு, "அப்பா, வேணுமானால், மற்றோர் காலிலும் அடிக்கலாம்" என்று சாவதானமாகக் கேட்டுக் கொண்டார். ஆனால் நல்ல வேளையாக திருடர்கள் அதற்கு மேல் அடிக்கவில்லை.



ஆஸ்ரம வாசிகள்—1935

ஆஸ்ரமவாசிகள் பக்கத்திலிருந்த பந்தலில் போய்உட்கார்ந்ததும் உள்ளேயிருந்து திருடன் ஒருவன் வந்து அரிக்கன் லைட் ஒன்று வேண்டும் என்று கேட்டான். அதையும் கொடுக்குமாறு அருள் வள்ளல் உத்தரவிட்டார்.

ஆனால் திருடக்கூடிய சொத்து ஒன்றும் அங்கு இல்லை. அகப்பட்டதெல்லாம் சேர்த்து பத்து ரூபாய் கூடப் பெறாது. இதில் ஆறு ரூபாய் ரொக்கம். அதுவும் வெளியூர்க்காரர் ஒருவர் வைத்திருந்த பணம்.

திருடர்களுக்கு இது பெரிய ஏமாற்றம். கோபம் மூண்டு எழுந்தது. தடியை ஓங்கி, மஹர்ஷிகளைப் பயமுறுத்தி, "உன் பணம் எல்லாம் எங்கே? எங்கே வைத்திருக்



ஸ்கந்தாஸ்ரமம்—மலை யடிவாரத்திலிருந்து தோன்றும் காட்சி

கிறாய்?" என்று கேட்டனர்.

"பிச்சை யெடுத்து உண்ணும் சாதுக்களிடத்தில் பணம் ஏது?" என்று மஹர்ஷிகள் சாந்தமாகப் பதில் சொன்னார்.

ஆனால் திருடர்கள் இதை நம்பவில்லை. கட்டிடத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் ஆராயத் தொடங்கினர்.

"சரி, நீங்கள், உங்கள் உடம்பில் பட்ட காயங்களை கவனித்துக்கொள்ளுங்கள்," என்று மஹர்ஷிகள் பக்தர்களை நோக்கிச் சொன்னார்.

அப்போது, "ஸ்வாமி சங்கதி என்ன?" என்று பரிவுடன் கேட்டார் ராமகிருஷ்ணன் என்ற பக்தர்.

"ஸ்வாமிக்கும் சரியான பூசைதான்," என்று மஹர்ஷிகள் சிரித்துக் கொண்டு சாவதானமாகக் கூறினார். ஆனால் இதைச் செவியேற்ற பக்தர் மனம் அழன்றது. இடது துடையிலே பலமான காயம் பட்டிருப்பதைக் கண்ட அப்பக்தர் சினம் கொண்டு, பக்கத்தில் கிடந்த கட்டை ஒன்றை எடுத்துக் கொண்டு, "உள்ளே போய் அந்த பயல்களை ஒரு கை பார்த்துவிட்டு வருகிறேன்," என்று கிளம்பினார்.

ஆனால் சாந்தமூர்த்தி மீண்டும் அவரைத் தடுத்தார். "கூடாது அப்பா, கூடாது.



உண்ணாமுலை அம்மன் மண்டபம்

கௌதம ஆச்ரமம்

நாம் சாதுக்கள் அல்லவா? நமது தர்மத்தைக் கைவிடலாமா? நீ போய் அவர்களை அடித்தால் ஏதாவது உயிர்ச் சேதம் ஏற்படலாம். அப்பொழுது, பழி யார்மீது விழும்? நியாயமாக நம்மையன்றோ சேரும்? திருடர்கள் மீது அல்ல. அவர்கள் தெரியாதவர்கள். அறியாமையில் மூழ்கியவர்கள். ஆனால் அறிந்த நாம் நியாயம் எதுவோ, அதை யல்லவா கடைப்பிடிக்க வேண்டும்? ஏதோ ஓர் வேளை நாமே நாக்கைக் கடித்துக்கொள்ளுகிறோம். அதற்காகப் பல்லை உடைத்து எறிந்து விடுகிறோமா, என்ன?''



திருடர்கள் வேலை நடந்துகொண்டிருக்கும் போது இவ்வாறான சாந்த மொழிகளால் பக்தர்களை சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார் மஹர்ஷிகள். கொள்ளையும் முடிந்தது. இரவு இரண்டு மணிக்குமேல் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு கள்வர் போய்விட்டனர். பின்னால் இவர்கள் பிடிபட்டு தண்டனை யடைந்தனர்.

* * *

திருடர்களின் துவம்சம் நடந்து கொண்டிருந்த போது, நோயுற்றிருந்த நாயின் மீதே மஹர்ஷிகளின் முதல் கவனம் சென்றதெனக் கூறினோம். மஹர்ஷிகளின் கருணையையும் அன்பையும் விளக்குவதற்கு இது ஓர் உதாரணம். தினசரி வாழ்விலும்



மலை யேறும்போது பக்தர்களுக்கு தரிசனம்



அருணகிரிக்கு மேற்கேயுள்ள அடி அண்ணாமலை ஆலயம்

இப்படித்தான். நாய், பசு, பூனை, குரங்கு போன்ற சகல ஜீவராசிகளையும் மஹர்ஷிகள் மனிதர் போலவே பாவித்து நடத்துகிறார்.



புதிதாக வருகிறவர்களுக்கு இது ஒவ்வோர் சமயம் ஆச்சரியத்தை உண்டுபண்ணும். "பசங்கள்" என்று மஹர்ஷிகள் சொல்லுவதைக் கேட்டு, யாரோ சில சிறுவர்களைக் குறிப்பதாகப் பலர் ஏமாறுவதுண்டு. ஆனால் அவர் குறிப்பது மானிடச் சிறுவர்களை அல்ல. நாய், பூனை போன்ற குழந்தைகளைத்தான். எல்லாம் அவருக்குச் சமமே. மிருகங்களை "அது" வென்று அழைப்பதுகூடக் கிடையாது. ஆஸ்ரமத்திற்குள் அவைகளை அவமரியாதையாகவோ, அன்பு இன்றியோ நடத்துவதைக் கொஞ்சமும் சகிக்க மாட்டார்.

"அந்த உடல்களுக்குள்ளே எந்தெந்த ஆத்மாக்கள் இருக்கின்றனவோ! பூர்வ கர்மத்தின் எப்பாகத்தை முடிப்பதற்காக நம்மை அடுத்திருக்கின்றனவோ? யாருக்குத் தெரியும்?" என்று அடிக்கடி கூறுவார்.

தற்சமயம் ஆஸ்ரமத்தில் உள்ள இத்தகைய சினேகிதர்களில் சிறந்தவள் லக்ஷ்மி என்னும் பசு. சில வருடங்களுக்கு முன் அவள் தாயாரை



மண்டபத்தில் அமர்ந்திருக்கும் காட்சி

ஆஸ்ரமத்துக்குப் பரிசாக ஓர் பக்தர் அளித்தார். லக்ஷ்மியும், இப்போது, தன் வகையில் ஆஸ்ரமத்துக்குப் பல கன்றுகளைப் பரிசளித்து வருகிறாள். சரியாக மஹர்ஷிகளின் ஜயந்தியன்று, ஒரு கன்றை ஈன்று அளிப்பதில், சென்ற நாலு வருஷங்களாக லக்ஷ்மி சிறிதும் தவறியதில்லை.

அன்றாடத் தபால்

லக்ஷ்மியைப் பற்றி பொதுவாக ஓர் நம்பிக்கையிருந்து வருகிறது. சில வருஷங்களுக்கு முன், மஹர்ஷிகளுக்கு ஓர் கீரைப் பாட்டி உணவளித்து வந்தாள். மலை ஊரெல்லாம் அலைந்து, கீரையும் காய் கிழங்குகளும் சேகரிப்பாள் அக்கிழவி. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடமிருந்து மற்ற சாமக்கிரியைகள் கிடைத்து விடும். மலைக் கோவிலின் மூலையில் ஓர் அடுப்புப்போட்டுச் சமைத்து, ஸ்வாமியிடம் எடுத்துக் கொண்டு போவாள். "கொஞ்சம் கீரை கொண்டுவந்திருக்கேன், ஸ்வாமி சாப்பிடணும்," என்று அன்புடன் அளிப்பாள். ஆனால் உண்மையில் கொண்டு வந்திருப்பது "கொஞ்சமாக" இருக்காது. ஸ்வாமியும் மகிழ்வுடன் அனைத்தையும் உண்பார். ஒவ்வோர் சமயம், ஸ்வாமியும் கிழவியின் இடத்திற்குச் சென்று, கறிகாய் நறுக்கிக்


ஆஸ்ரமத்தின் வடக்குவாசல்


ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமி

இப்படித்தான். நாய், பசு, பூனை, குரங்கு போன்ற சகல ஜீவராசிகளையும் மஹர்ஷிகள் மனிதர் போலவே பாவித்து நடத்துகிறார்.

புதிதாக வருகிறவர்களுக்கு இது ஒவ்வோர் சமயம் ஆச்சரியத்தை உண்டுபண்ணும். "பசங்கள்" என்று மஹர்ஷிகள் சொல்லுவதைக் கேட்டு, யாரோ சில சிறுவர்களைக் குறிப்பதாகப் பலர் ஏமாறுவதுண்டு. ஆனால் அவர் குறிப்பது மானிடச் சிறுவர்களை அல்ல. நாய், பூனை போன்ற குழந்தைகளைத்தான். எல்லாம் அவருக்குச் சமமே. மிருகங்களை "அது" வென்று அழைப்பதுகூடக் கிடையாது. ஆஸ்ரமத்திற்குள் அவைகளை அவமரியாதையாகவோ, அன்பு இன்றியோ நடத்துவதைக் கொஞ்சமும் சகிக்க மாட்டார்.

"அந்த உடல்களுக்குள்ளே எந்தெந்த ஆத்மாக்கள் இருக்கின்றனவோ! பூர்வ கர்மத்தின் எப்பாகத்தை முடிப்பதற்காக நம்மை அடுத்திருக்கின்றனவோ? யாருக்குத் தெரியும்?" என்று அடிக்கடி கூறுவார்.

தற்சமயம் ஆஸ்ரமத்தில் உள்ள இத்தகைய சிநேகிதர்களில் சிறந்தவள் லக்ஷ்மி என்னும் பசு. சில வருடங்களுக்கு முன் அவள் தாயாரை



மண்டபத்தில் அமர்ந்திருக்கும் காட்சி

ஆஸ்ரமத்துக்குப் பரிசாக ஓர் பக்தர் அளித்தார். லக்ஷ்மியும், இப்போது, தன் வகையில் ஆஸ்ரமத்துக்குப் பல கன்றுகளைப் பரிசளித்து வருகிறாள். சரியாக மஹார்ஷிகளின் ஜயந்தியன்று, ஒரு கன்றை ஈன்று அளிப்பதில், சென்ற நாலு வருஷங்களாக லக்ஷ்மி சிறிதும் தவறியதில்லை.

அன்றாடத் தபால்

லக்ஷ்மியைப் பற்றி பொதுவாக ஓர் நம்பிக்கையிருந்து வருகிறது. சில வருஷங்களுக்கு முன், மஹார்ஷிகளுக்கு ஓர் கீரைப் பாட்டி உணவளித்து வந்தாள். மலை ஊரெல்லாம் அலைந்து, கீரையும் காய் கிழங்குகளும் சேகரிப்பாள் அக்கிழவி. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடமிருந்து மற்ற சாமக்கிரியைகள் கிடைத்து விடும். மலைக் கோவிலின் மூலையில் ஓர் அடுப்புப்போட்டுச் சமைத்து, ஸ்வாமியிடம் எடுத்துக் கொண்டு போவாள். "கொஞ்சம் கீரை கொண்டுவந்திருக்கேன், ஸ்வாமி சாப்பிடணும்," என்று அன்புடன் அளிப்பாள். ஆனால் உண்மையில் கொண்டு வந்திருப்பது "கொஞ்சமாக" இருக்காது. ஸ்வாமியும் மகிழ்வுடன் அனைத்தையும் உண்பார். ஒவ்வோர் சமயம், ஸ்வாமியும் கிழவியின் இடத்திற்குச் சென்று, கறிகாய் நறுக்கிக்



ஆஸ்ரமத்தின் வடக்குவாசல்



ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமி

கொடுத்து ஒத்தாசை செய்வதுண்டு. சில காலத்திற்கு முன் தான் இப்பெண்மணி கால முடிவடைந்தார். ஆஸ்ரமத்திற்கு அருகிலேயே அடக்கம் செய்திருக்கின்றனர். இந்தக் கீரைக்கிழவி தான் லக்ஷ்மியாகப் பிறந்திருப்பதாக ஓர் நம்பிக்கை நிலவுகின்றது.



ஆஸ்ரமத்தின் கட்டிடங்களில் விசாலமானது கோசாலைதான். அங்குதான் லக்ஷ்மிக்கு தற்போது வாசம். எதற்கும் 'தான் தான் முதல்' என்று வருவதில் லக்ஷ்மிக்கு இணை ஒருவரும் கிடையாது. கோசாலை ஆரம்ப வைபவத்தின்போது இம்மாதிரி ருசிகரமான சம்பவம் ஒன்று நடந்தது.

ஆரம்ப லக்கினத்திற்கு கொஞ்ச நாழிகைக்கு முன்னமே தொடங்கி லக்ஷ்மியின் ஆர்ப்பாட்டம் ஆரம்பமாயிற்று. கட்டின இடத்தில் தங்க மறுத்தாள். அவிழ்த்து விட்டவுடன், நேராக மண்டபத்திற்குள் நுழைந்து, அதைவிட்டு வெளியேற மறுத்து விட்டாள்.

ஆஸ்ரமவாசிகள் பலாத்காரமாக வெளியேற்ற முயற்சித்தனர். "வேண்டாம், வேண்டாம், அவள் இங்கேயே இருக்கட்டும். தன் அரண்மனைக்கு என்னை அழைத்துப்போக அல்லவா வந்திருக்கிறாள்!" என்று மஹர்ஷிகள் பரிந்து பேசினார்.

நடந்ததும் அப்படித்தான். குறித்த நேரம்

ஜயந்தி, மஹாபூஜை போன்ற விசேஷ காலங்களில் ஏழைகளுக்கு அன்னமளிக்கும் கைங்கர்யத்தை மேற்கொள்ளும் ரமண சாரணர் படை

வந்ததும், கோசாலைக்கு மஹர்ஷிகளுக்கு வழி காட்டுவதுபோல முன்னே நடந்தாள் லக்ஷ்மி. கதவைத் திறந்ததும், புது வீட்டில் பசுக்கூட்டங்களுக்கெல்லாம் தலைமையாக முதலில் நுழைந்தது லக்ஷ்மிதான்.

தற்போதுள்ள ஆஸ்ரமத்திற்கு வந்த பின், மஹர்ஷிகளின் இந்த நண்பர்களின் கூட்டம் மிகவும் குறைந்துவிட்டது. ஆனால் மலைமீதிருக்கும்போது, நாய்களும், குரங்குகளும் அவருடன் அளவளாவி அன்பு பாராட்டி வந்தன.

இதில் சின்னக் கருப்பன் என்னும் நாயைப் பற்றி ஸ்ரீ மஹர்ஷிகள் பின்வருமாறு கூறுகிறார்:

"சின்னக்கருப்பன் மேன்மையான குணங்களை உடையவன். விருபாக்ஷ குகையில் இருக்கும்போது, ஏதோ ஓர் கருப்பு உருவம் தூரத்தில் போவதை அடிக்கடி பார்த்தோம். சில சமயங்களில் புதருக்கு மேல் தலை மட்டும் நீட்டிக் கொண்டிருப்பது தெரியும். ஆனால் பக்கத்தில் வருவதே கிடையாது. சின்னக்கருப்பனின் வைராக்கியம் நிரம்ப முற்றினதாகத் தோன்றியது. ஒருவரிடமும் அவன் நெருங்குவதில்லை. ஆள் வந்த இடம் அவனுக்கு ஆகாது போலத் தோன்றியது. நாங்களும்

கார்த்திகை தீபக் கொப்பரை



காட்டுச் சோண தீர்த்தம். ஆதியில் பகவான் அடிக்கடி தங்கிய ரமணீயமான இடம்



பஞ்சமுகம்: அருணகிரியின் ஐந்து முகங்கள். சமீபத்தில் இதில் ஒன்று மறைந்துவிட்டது.

அவனுடைய சுயேச்சையையும், வைராக்கியத்தையும் மதித்து, அந்த இடத்தில் உணவை வைத்துவிட்டு தூரப் போய்விடுவோம். இப்படியாக நடந்து கொண்டிருந்தது. பின்பு ஒரு நாள், எல்லோரும் மலைக்கு ஏறிப்போகும்போது, கருப்பன் பாதைமீது திடீரென்று பாய்ந்து, சந்தோஷத்துடன் வாலைக்குழைத்துக் கொண்டு என் மீது விழுந்து விளையாட ஆரம்பித்தான். மற்றவர்களை யெல்லாம் விட்டு என்னை மட்டும் கருப்பன் குறிப்பாகத் தெரிந்து எடுத்ததைக் கண்டு யாவரும் வியந்தனர்.

"இதற்குப் பின் கருப்பனும் எங்களைப் போலவே ஓர் ஆஸ்ரம வாசியாகி விட்டான். அத்தியந்த நண்பன். உபகாரி. மேன்மையான குணம். இதற்கு முன்னிருந்த கூச்சமெல்லாம் அபார அன்பாக மாறியது. எல்லோரையும் சகோதரராகப் பாவித்து, வருவோர் போவோருடன் அளவளாவிப் பழகி, மடிமீது ஏறித் தாவிக் குலாவுவான். எல்லோரும் அனேகமாக அவனிடம் பக்ஷமாகவே யிருந்தனர். ஆனால் ஒரு சிலர் மட்டும் கருப்பனைக் கண்டால் சற்று விலகிச் சென்றனர். அவர்களையும் அவன் அவ்வளவு லேசில் விடுவதில்லை. எந்த வெறுப்பையும் முடிவாக எடுத்துக் கொள்ளுவதில்லை. ஆனால் 'போ' என்று சொல்லிவிட்டால், வேறு பேச்சின்றி சாதுவாக வெளியேறி விடுவான்.

"ஒரு நாள், நம் குகைக்கு அருகிலிருந்த வில்வ மரத்தடியில் உட்கார்ந்து ஓர் வைதிக பிராமணர் ஜபம் செய்து கொண்டிருந்தார். சின்னக் கருப்பன் அவருக்கு வெகு சமீபத்தில் சென்றுவிட்டான். நாய்கள் என்றால் 'தீட்டு' என்பது பிராமணரின் நம்பிக்கை. நாயைக் கண்டால் கூடச் சற்று விலகி தூரத்தில் போவது வழக்கம். ஆனால் கருப்பன் அனுஷ்டிப்பதும், அவனுக்குத் தெரிந்ததும், இயற்கை நியதியான சமத்துவம்தான். ஆகவே தூரத்தினால்கூட கருப்பன் அந்த இடத்திற்கே திரும்பிச் சென்று கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஆஸ்ரம வாசி ஒருவர், பிராமணரின் சங்கடத்தைத் தவிர்க்கும் நிமித்தம் தடியைத் தூக்கி மிரட்டி, நாய்க்கு லேசாக ஓர் அடி கொடுத்தார். கருப்பனும் ஊளையிட்டுக் கொண்டு ஓட்டமெடுத்தான். அதன் பிறகு கருப்பனைக் காணவேயில்லை. ஏதோ ஒரு தடவையாயிருந்தால் கூட, தன்னை அவமதித்து அடித்த இடத்தைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டான் கருப்பன்."

மற்றோர் சிறு நாயும் இவ்வாறே மிகுந்த ரோஷத்துடன் நடந்து கொண்டது. ஆஸ்ரம வாசி யொருவர் வைது விட்டார் என்பதற்காக நேரே சங்க தீர்த்தத்திற்கு ஓடிப்போய் விழுந்து உயிரை மாய்த்துக்கொண்டது.

மற்றோர் ஆச்சரியமான நாய் கமலா. "இதோ பார், இவர் புதியவர். இவரைக் கூட்டிக்கொண்டு போய் எல்லாவற்றையும் காட்டி விட்டு வா," என்பார் மஹர்ஷி. கமலா உடனே புறப்படுவாள். மலையைச் சுற்றிலும் உள்ள விக்கிரகம்

குளம், குகை ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் புதிதாக வந்தவருக்குக் காட்டிவிட்டுத் தான் திரும்புவாள்.

ஜாக் என்பவன் வேறு தினுசு. அவன் பெரிய தபஸ்வி. குறிப்பிட்ட வேளைகளில், அதுவும் அனேகமாக ஸ்வாமி பிரசாதங்களைத் தான் அவன் புசிப்பது. பாக்கி நேரங்களில் மஹர்ஷிகளின் அருகில் உள்ள ஓர் பொந்தில் மௌனமாக, நிச்சலனமாக வீற்றிருப்பான்.

* * *

மலையின்மீது குரங்குகளுக்குக் குறைவில்லை. மஹர்ஷிகளுக்கு இவைகளிடத்தும் மிகுந்த பிரியம்.



அன்புடன் கொஞ்சும் அணில்

குரங்குகளுக்குள்ளே ஓர் கண்டிப்பான திட்டம் உண்டு. மனிதர் தீண்டிய வானரங்களை பிரஷ்டமாக மதித்து, சேர்த்துக் கொள்ளுவதில்லை. ஆனால் இந்த விதிக்கு மஹர்ஷிகள் மட்டும் விலக்கு ! இதோடு நில்லாமல், மஹர்ஷிகளுக்கு மற்றோர் உயர்ந்த கௌரவமும் கிடைத்திருக்கிறது. காயமடைந்து கிடந்த நொண்டிக் குரங்கு ஒன்றை மஹர்ஷிகள் எடுத்து வளர்த்துக் காப்பாற்றினார். தங்களுக்குள்ளே மிகுந்த பலாட்டியனான ஒருவனையே குரங்குகள் ராஜாவாகத் தெரிந்தெடுப்பது வழக்கம். ஆயினும் மஹர்ஷிகளின் அன்பைப்பெற்ற அந்த நொண்டிக் குரங்கையே மற்ற வானரங்கள் ராஜாவாகக் கொண்டன.



ஜயந்தியின்போது

இதைத் தவிர, வானர யுத்தங்களைத் தடுத்து மத்தியஸ்தம் செய்து வைக்கும் கௌரவமும் அவருக்கு உண்டு. காட்டு எல்லைகள் வெவ்வேறு கூட்டங்களுக்கென பிரித்து வைக்கப்பட்டிருக்கும். இதில் ஒரு கூட்டத்தின் எல்லையில் மற்றோர் வானரக் கூட்டம் சென்றால் சண்டை ஏற்பட்டுவிடும். இதை தூதர்கள் மூலம் சமரசமாக தீர்த்துக்கொள்ளுவதும் உண்டு. சமரசம் ஏற்படாவிட்டால், வெகு கோரமான வானர யுத்தம்தான். மஹர்ஷிகள் மலைமீதிருக்கும் வரை இந்த யுத்தங்கள் வெகு அபூர்வமாயிருந்தன. தகராறு வந்தவுடன் இரு கக்ஷியினரையும் அழைத்து சமாதானம் செய்து அனுப்பிவிடுவார்.

இவ்வானர நண்பர்களைப்பற்றி மஹர்ஷிகள் எத்தனையோ கதைகள் சொல்வதுண்டு. ஒரு குரங்குக் கூட்டத்தைச் சேர்ந்த இரண்டு பெரிய குரங்குகளை ராஜா பிரஷ்டம் செய்து வைத்து விட்டதாம். இதனால் வானரங்களுக்குள் மிகுந்த கிளர்ச்சி ஏற்பட்டது. அதிருப்தி அதிகரித்து, வானர ராஜ்யத்திலே பகிரங்கப் புரட்சி ஏற்படும் நிலைமைக்கு முற்றிவிட்டது. திடீரென்று ராஜா மறைந்துவிட்டது. இரண்டு வாரம் வரை தலைகாட்டவில்லை. பின்

ஓர் நாள் திடீரென்று தோன்றி கலகத் தலைவர்கள் எல்லோரையும் அறைகூவி அழைத்தது. ஆனால் எதிர்த்து நிற்கும் தைரியம் ஒருவருக்கும் இல்லை. பிரஜைகள் யாவும் பயந்து பணிந்து விட்டன. இரண்டு வாரத் தபசின் பலன் அது, என்று கூறுவார் மஹர்ஷி.

சிறு சேஷ்டை செய்த குரங்குகள் கூட மஹர்ஷிகளிடம் உடனே அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும். பொதுவாக, எல்லாக் குரங்குகளும் மஹர்ஷிகளிடம் மிகவும் அன்பாகவும், நன்றியறிவுடனுந்தான் நடந்து வருகின்றன.



ஓர் நாள் கடும் வெய்யிலில் மஹர்ஷிகள் சில பக்தர்களுடன் வெகு தூரம் நடந்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். வெய்யில் கொடுமையுடன், பசியும் தாகமும் அதிகரித்தது. பக்கத்தில் எங்கும் துளித் தண்ணீர் கூடக் கிடையாது.

அவ்வழியே ஓர் குரங்குக் கூட்டம் போய்க் கொண்டிருந்தது. மஹர்ஷிகளின் குழாத்தைப் பார்த்ததும் இவர்கள் நிலையை ஊகித்து உணர்ந்து கொண்டன போலும். உடனே பக்கத்தில் உள்ள ஒரு நாவல் மரத்தின் மீது தாவி ஏறின. கிளைகளைக் குலுக்கி, போதுமான நாவற் பழங்களை உதிர்த்து விட்டு பேசாமல் இறங்கிப் போய்விட்டன. அந்தக் கூட்டத்தில் ஒரு குரங்கு கூட ஒரு பழத்தை தின்னவில்லை!

அபாயகரமான ஜந்துக்களிடமும், மஹர்ஷிகள் சினேகமாகவே இருக்கிறார். மஹர்ஷிகளின் குகைகளில் எத்தனையோ பாம்புகள் வசித்து வந்தன.

"அவைகளின் வீட்டுக்கல்லவா நாம் வந்திருக்கிறோம்? அவைகளை தொந்தரவு செய்யவோ, துன்புறுத்தவோ நமக்குச் சிறிதும் உரிமை இல்லை. மேலும், இவைகள் நம்மை ஒன்றும் செய்வதில்லையே," என்று மஹர்ஷிகள் அடிக்கடி கூறுவார்.

ஓர் நாள் மஹர்ஷிகள் மலையில் ஒரு காட்டுப் பாதையாகச் சென்று கொண்டிருந்தார். ஓர் குளவிக் கூட்டில் இடது துடை தட்டி விட்டது. கொஞ்ச தூரம் போவதற்குள் குளவிகள் துரத்திக் கொண்டு வந்து அதே துடையில் கொட்டின.

"வேணும், வேணும். கூட்டைக் குலைத்தது இந்தத் துடைதான்," என்று கூறி, குளவிகள் ஆத்திரம் தீருமளவும் கொட்டித் திரும்பும் வரை அசையாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

* * *

கடந்த ஐந்து ஆண்டுகளில் மஹர்ஷிகளைப் பற்றி வெளிவந்துள்ள நூல்கள் பல. முதன் முதலில் மஹர்ஷிகளின் சரித்திரத்தை சிறந்த முறையில் எழுதியவர் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமி. பூர்வாச்சிரமத்தில் சேலம் பி. வி. நரசிம்ம அய்யர் என்ற நாமம் பூண்டவர். தீவிர தேசியவாதி. அச்சமற்ற தேசபக்தர். சென்னை கவர்

ணரின் சட்டசபையில் பலவருஷங்கள் அங்கம் வகித்து இந்தியாவெங்கும் புகழ் பெற்றவர். குடும்பத்திலே நேர்ந்த ஓர் துக்ககரமான சம்பவத்திற்குப் பின், உலக வாழ்க்கையிலிருந்து விலகி, ரமணாஶ்ரமத்தையடைந்து ஓர் குகையில் வசித்து, “ஸெல்ப்-ரியலைசேஷன்” (*Self-Realisation*) என்னும் புத்தகத்தின் மூலம், வெளியுலகிற்கு மஹர்ஷிகளின் பூர்ண மகிமையை உணரும் பாக்கியத்தை அளித்தார். இவ்வாங்கில நூல் தற்போது மூன்றும் பதிப்பிலிருக்கிறது.



தூரதரிசனி—மலையேறுபவரைக் கவனிக்கும் காட்சி

“சத்தர்சன பாஷ்யமும் மஹர்ஷிகளின் வாக்குகளும்,” (*Satdarshana Bhashya and Talks with Maharshi*) என்பது மற்றோர் சிறந்த நூல். தற்போது ஸ்ரீ அரவிந்த ஆஶ்ரமத்தில் தவம் செய்யும் ஸ்ரீ டி. வி. கபாலி சாஸ்திரியார் இயற்றியது. இவர் காவ்யகண்ட கணபதி முனிவரின் அத்தியந்த பக்தர். வெகு காலத்திற்கு முன்பே மஹர்ஷிகளின் மகிமையை உணர்ந்து, அடுத்து அருள் பெற்றவர். மஹர்ஷிகளின் உபதேசத்தைப் பற்றி இவருக்குள்ள அறிவும், அனு



மாலைவேளையில், ஹாலுக்கு வெளியே அமர்ந்திருக்கும் கோலம்

பவமும், இப்புத்தகத்தின் மூலம் காணக் கிடைக்கின்றன. அதிலும் "மஹர்ஷிகளின் வாக்கு" என்னும் பகுதி, படித்தவர், பாமரர் முதலிய யாவருக்கும் பல சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதில் மிகுந்த உபயோககரமானது.



ஸ்ரீ சுத்தானந்த பாரதி, "ரமண விஜயம்" என்று தமிழில் ஸவிஸ்தாரமான சரித்திரம் ஒன்று எழுதியுள்ளார். சமீபத்தில், தெலுங்கிலும் இது வெளிவந்துள்ளது.

வெளி நாட்டாருக்கு மஹர்ஷிகளின் மகிமையை முதன் முதல் உணர்த்தியது பால் பிரண்டனின் "ஸெர்ச் இன் ஸீக்ரட் இந்தியா" (Search in Secret India) என்னும் நூலே. மேல் நாட்டார் எளிதில் அறிந்து கொள்ளும் முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதற்குப் பின் ஆசிரியர் பிரண்டன் எழுதிய இரண்டு நூல்களுங் கூட (The Secret Path and Message from Arunachala) இதே விஷயத்தைப் பற்றியவைதாம். இந்நூல்களின் பயனாக, ஐரோப்பியர் பலர் ஆஸ்ரமத்திற்கு வரத் தொடங்கினர். சிலர் வெகுநாள் வரை ஆஸ்ரமத்திலேயே தங்கிச் செல்வாராயினர்.

ஸ்ரீ பிரண்டன் இந்தியாவிற்குத் திரும்பி வந்து, சென்ற சில மாதங்களாகத் திருவண்ணமலையில் வசித்து வருகிறார். தினந்தோறும் ஆஸ்ரமத்தை யடைந்து, இருந்து விட்டுப் போவார்.

ஸ்ரீ மஹர்ஷி, ஸ்வாமி ப்ரஜ்ஞானந்தர், பால் பிரண்டன்

ஸ்ரீ மஹர்ஷிகளின் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் வேலையில் தற்போது ஈடுபட்டிருக்கிறார்.

* * *

ரமணாஸ்ரமமும் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. ஏற்கனவே பல கட்டிடங்களும், கொட்டகைகளும் இருக்கின்றன. வந்தவர்கள் தங்குவதற்கு ஏராளமான இடம் இருக்கிறது. இதைத் தவிர, மஹர்ஷிகள் பக்கத்திலிருந்து அருள் பெற விரும்பும் பக்தர்கள் கட்டியுள்ள சிறு குடிசைகள் சில மேல்புறத்திலிருக்கின்றன.



யோகி ராமையா என்னும் பக்தர் இவர்களில் ஒருவர். ஞானமார்க்கத்தில் வெகுதூரம் சாதனம் செய்தவர். நெல்லூர் ஜில்லாவில், யோகி ராமையாவுக்கு மிகுந்த செல்வாக்கும் சீடர்களும் உண்டு. ஆயினும், வருஷத்தில் ஆறுமாதமாவது ரமணாஸ்ரமத்தில் இருந்துவிட்டுப் போகாமல் இருப்பதில்லை. ஆஸ்ரமத்திற்கு வெகுதூரம் உதவி செய்தவர். யோகி ராமையா சென்ற சில வருஷங்களாக மௌன விரதம் அனுஷ்டித்து வருகிறார்.

ஸ்ரீ ஏ. டபிள்யூ. சாட்விக் என்னும் ஐரோப்பியரும் ஆஸ்ரமத்திலேயே தங்கியிருக்கிறார். இவர் ராணுவத்தில் மேஜராக இருந்து "ரிட்டயர்" ஆனவர். ஸ்பெயின் தேசத்தில் சஞ்சாரம் செய்யும்போது ஸ்ரீ பால் பிரண்டனின் புஸ்தகத்தைப் படித்தார். மஹர்ஷிகளின் மகிமையை உணர்ந்து இந்தியாவிற்கு ஓடிவந்தார். இப்போது ஸ்ரீ மஹர்ஷிகளை விட்டுப் பிரிவது மேஜருக்கு மகா கஷ்டமாயிருக்கிறது.

இதைத் தவிர சாவகாசம் கிடைத்த போதெல்லாம் ஆஸ்ரமத்திற்கு ஓடி வரும் பக்தர்கள் தொகை கணக்கிலடங்காது.



மலையிலிருந்து தோன்றும் ஆஸ்ரமக்காட்சி. இடதுபுறம் கோசாலை. நடுவில் மண்டபம். வலதுபுறம் தென்படுவது பக்தர்கள் பர்ணசாலை

இவ்வாறு இவர்கள் வருவதற்குக் காரணம் என்ன? இவர்களை இழுக்கும் காந்தம் யாது?



இதற்குத் திட்டமான பதில் கூற அனேகமாக ஒருவராலும் முடியாது. ஆனால் ஆஶ்ரமத்தில் தங்குவதாலும் தங்கும்போதும், அளவற்ற ஆனந்தமும் ஸந்துஷ்டியும் ஏற்படுகிறதென்பதை அனைவரும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளுவார்கள்.

ஸ்ரீ பால் பிரண்டன் குறிப்பிடுவது போல, வெளிக்குத் தெரியாத, சந்தடியற்ற, வற்றாத சஞ்சீவி அலைகளின் மூலம், சஞ்சலமென்ற நோய்ப்பட்ட ஹிருதயங்களை ஸ்ரீமஹர்ஷிகள் ஹிதப்படுத்துகிறார்.

“அவர் அருகேயிருந்தபின் ஆத்ம ஜோதி பிரகாசிக்காமலிராது. அந்த ஞானப் பிழம்பினின்று வரும் கிரணத்தினால் மனம் பிரகாசிக்காமலிருக்க முடியாது.

“அவரது நடத்தையும் செய்கைகளும் ஓர் விதத்தில் சாஸ்திரோக்தமானது. பகுத்தறிவுக் குட்பட்டது. மந்திர தந்திர சக்திகள் ஒன்றையும் அவர் உபயோகிப்பதில்லை. குருட்டு நம்பிக்கை ஒன்றையும் அவர் வேண்டுவதில்லை.”

“அந்தி இருட்டை ஊடுருவிப்பாயும் இரட்டை நக்ஷத்திரங்கள் போன்று அவர் விழிகளிரண்டும் ஜ்வலிக்கின்றன. பரத நாட்டின் தவமுனி வம்சத்தின் கடைசிச் சந்ததியான இப்புனிதரது



மலையிலிருந்து திரும்பி, யோகி ராமய்யாவுடன் ஆஶ்ரமத்தில் நுழையும் காட்சி

போன்ற அபூர்வமான கண்களை நான் இதுவரை எங்குமே கண்டதில்லை. தெய்விக சக்தியினைக் கண்களில் பிரதிபிம்பிக்கக் காணலாம் என்பது முற்றிலும் உண்மை. முனிவர்களிடத்திலே இதைக் காணலாம்.”



சூர்யோதயத்திற்கு முன்பே ஆஶ்ரமத்தின் வேலை ஆரம்பமாகின்றது. வைகறையில், நாலு மணிக்குள்ளாக, மஹர்ஷிகளும், ஆஶ்ரமவாசிகளும் துயில் நீத்துக் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, மண்டபத்தில் கூடி, தியானத்திலோ, அல்லது பக்திரசப் பாடல்களின் கானத்திலோ ஈடுபடுவார்கள்.

ஸ்ரீ மஹர்ஷிகள் காய்கறி நறுக்கிக் கொடுப்பது போன்ற வேலைகளைச் செய்து கொண்டிருப்பதைக் காலை ஆறு மணிக்குச் சமையற்கட்டிற் காணலாம். இவ்வேலையைச் செய்ய வேறு ஒருவரும் இல்லை என்பதல்ல. எல்லோரும், எல்லாவற்றிலும் சமம் என்னும் தர்மத்தை வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அனுஷ்டிப்பது அவரது கொள்கை.

இதன் பின் போஜன சாலையில், காபியும் சிற்றுண்டியும் நடக்கும். வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்களின் கூட்டமும் இதற்குள் கூடிவிடும்.

1936 மஹாபூஜை—இடது கோடியில் லக்ஷ்மியும் நின்றுகொண்டிருக்கிறள்

மஹர்ஷிகள் ஏதாவது வேலை செய்து கொண்டேயிருப்பார். சில வேளை அச்சுப் பிரதிகளைத் திருத்திக்கொண்டிருப்பார். இல்லாவிடில் பக்தர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்துக்கொண்டிருப்பார். மற்ற ஆஸ்ரமவாசிகள், தத்தமக்கென்று ஏற்பட்டிருக்கும் சமையல், பூஜை, தோட்ட வேலை போன்ற பல் வேறு காரியங்களைச் செய்து கொண்டிருப்பர்.

ஆஸ்ரமத்தில் உள்ள வாயில்லா ஜீவன்களுக்கும் வெளியே காத்திருக்கும் ஏழைகளுக்கும் முதலில் அன்னமிட்ட பின், சரியாகப் பத்தரை மணிக்கு போஜனம் ஆரம்பமாகும். இதன் பின் அன்றுடத் தபால்களைப் பார்ப்பது வழக்கம். ஒரு நிமிஷங் கூட வீணாக்குவதில்லை. புஸ்தகங்களை பைண்டு செய்வது, இலை தைப்பது போன்ற எல்லாவிதமான வேலைகளையும் ஸ்ரீ மஹர்ஷிகளே நேரில் கவனிப்பார்.


ஜயந்தி—போஜனம்

மாலை மூன்று மணிக்கு காபி, அல்லது டீ கொடுக்கப்படும். இதன் பின் பார்க்க வந்தவர்களின் கூட்டம் ஏராளமாயிருக்கும். இதுதான் பொதுவாக கேள்விகள் கேட்கும் சமயம். சரியான, மனப்பூர்வமான கேள்விகளுக்கு உடனே பதில் உண்டு. குறும்பு வினைக்களுக்கு பதில் கிடைக்காது. எனினும், ஒவ்வோர் சமயத்தில் அக் கேள்விகளுக்கு சரியான பதில்களும் கிடைப்பது உண்டு. மஹர்ஷிகளின் மௌனத்தினாலேயே பல சந்தேகங்கள் நிவிருத்தியாகின்றன.

இத்தருணத்தில்தான் காணிக்கைகளும் வெகுமதிகளும் வருவது வழக்கம். நாளைக்கு என்று எதையும் வைத்துக்கொள்ளுவதில்லை. மஹர்ஷிகள் சிறிது எடுத்துக் கொண்டதும், பிரசாதங்களை வினியோகித்து விடுவார்கள்.

சந்தியா காலத்தில் சம்ஸ்கிருதப் பள்ளி மாணவர்கள் வந்து கீதம் பாடுவர். இதன் பின் தியானம்.

ஏழரை மணிக்கு இராப்போஜனம் ; சிறிது நேரம் தியானம் ; ஒன்பது மணிக்குப் படுக்கை.

இதுதான் ஆஸ்ரமத்தின் நிகழ்ச்சி முறை. அன்னையின் மஹாபூஜையின் போதும், ஸ்ரீ மஹர்ஷிகளின் ஜயந்தியின்போதுங் கூட இந்த முறை தவறாது நடைபெறும். இவ்விரண்டு நாட்களிலும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் ஆஸ்ரமத்தை வந்தடைவர். அவ்வளவு பேருக்கும் அன்னமிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஜயந்தியைக் கொண்டாடுவது மஹர்ஷிகளுக்குப் பிடிக்கவில்லை. பக்தர்களின் கட்டாயத்திற்காக இதை அனுமதித்திருக்கிறார். இந்தச் செலவுக்கு எல்லாம் பொது ஜனங்களிடமிருந்து பணம் நன்கொடையாகக் கிடைக்கின்றது. சாமான்களாகவே சிலர் அனுப்புகின்றனர். சிலர் பணமாகக் கொடுக்கின்றனர். விசேஷத்திற்கு முதல் நாள் வரை உக்கிராணம் காலியாக இருக்கும். ஆனால் குறிப்பிட்ட சமயத்திற்குள் எல்லாச் சாமான்களும் எப்படியோ வந்து நிரம்பிவிடுகின்றன.

முதன் முதலில் ஜயந்தியைக் கொண்டாட ஏற்பாடு செய்தவர் ஓர் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவரை வேறு ஊருக்கு மாற்றியதும், ஜயந்திக் கொண்டாட்டம் நின்றுவிடும் போலத் தோன்றியது. "போன வருஷம் பத்து

மூட்டை அரிசி சமைத்தோம். இவ்வருஷம் ஒரு மூட்டை கூட இருக்காதுபோலத் தோன்றுகிறது,” என்று ஒரு பக்தர் வருத்தத்துடன் மஹர்ஷிகளிடம் முறையிட்டார்.

அன்று நடுநிசிக்கு வாயிற் கதவை யாரோ தட்டிக் கூப்பிடவே கதவைத் திறந்தனர். அன்னதானத்திற்கு வேண்டிய சாமான்கள் யாவும் நிரம்பிய இரண்டு கட்டை வண்டிகள் வந்து நின்றன. பிரார்த்தனைக் காணிக்கை என்று சொல்லி, சாமான்களை இறக்கிவிட்டு, பெயரைக்கூடத் தெரிவிக்காமல் வண்டிக்காரர் திரும்பிவிட்டார்!

கோவில் மாத்ருபூதேச மூர்த்தி

ஆஸ்ரம கைங்கர்யம் செழித்து ஓங்கியது இவ்வாறே. இதேமாதிரி தான் இன்றும் நடந்து வருகிறது.

ஸ்ரீமஹர்ஷிகள் எளிய வாழ்க்கையின் பூஷணம். முதன் முதல் திருவண்ணாமலையை அடைந்த அன்று அணிந்திருந்த கௌபீனந்தான் இன்றும் அவரது ஆடையாக இருந்து வருகிறது. புஷ்ப மாலை சூட்டுவதைக் கூடக் கண்டிப்பாக மறுத்து விடுகிறார். ஆகவே, அபிஷேகம் போன்ற படாடோபங்களை ஆஸ்ரமத்தில் காணமுடியாது. ஸ்வாமி கைங்கர்யத்திற்காக பல பக்தர்கள் பணம் கொடுத்து உதவி வருகின்றனர். ஆனால் மஹர்ஷிகள் பணத்தைக் கையாலும் தொடுவதில்லை. ஆரம்பத்திலிருந்தே, இம்மாதிரியான லௌகிக காரியங்களை மற்றவர்களே கவனித்து வந்தனர். சர்வாதிகாரியென்று அழைக்கப்படும் ஸ்வாமிகளின் சகோ



கோசாலையில் நின்றுகொண்டிருக்கும் காட்சி

தரரான ஸ்ரீ நிரஞ்சனானந்தஸ்வாமி தற்போது இந்த வேலைகளை யெல்லாம் மேற்கொண்டு இதே ஆடம்பரமற்ற தன்மையில், ஆஸ்ரமத்தை சீரும் செட்டுமாகச் சிறப்புடன் நிர்வகித்து வருகிறார்.

* * *

அருணாசலத்தின் மகிமையே மகிமை! பாலப் பருவத்திலே, கேட்ட மாத்திரத்தில் மஹர்ஷிகளின் உடலிலே ஞானச் சிலிர்ப்பை ஊட்டியது அருணாசலம் என்னும் நாமம். சகோதரனது சினந்த மொழிகளைச் செவியேற்ற பின் வீட்டைத் துறந்ததும் நேரே ஓடி அவர் அடைந்ததும் அருணாசலமே.

பின்னர் அவர் நிரந்தரமாகத் தங்கித் தவமியற்றத் தொடங்கியதும் அருணாசலத்தின் மீதே. தற்போது அமைந்துள்ள ஆஸ்ரமம் இருப்பதும், அருணாசலத்தின் தென்புறத்துச் சாரலிலே தான்.

ஜோதிமலை யென்று பேர் பெற்றது அருணாசலம். பல்லாண்டு பல்லாண்டுகளாக பரத தேசத்தினர் புனிதமாகப் போற்றிப் புகழ்ந்தது அருணாசலம். தேஜோலிங்கம் எனத் தொழுது ஏத்தப்படுவது அருணாசலம். பல்லாயிரமாண்டுகளாக, அருணகிரி யோகியென்ற சித்தர் வாழுமிடம் அருணாசலம்.

தக்ஷிண கைலாசம் என்றும் இதைப் போற்றுவர். உத்தர கைலாயத்தை விடத் தொன்மையானது இது என்றும் சிலர் கூறுவர். கர்ண பரம்பரையாகவும், பூகோள இயற்கை சாஸ்திரப் பிரமாணத்தின்படியும் பார்த்தால், ஹிமயபர்வதம் தோன்றுவதற்கு வெகு நாட்களுக்கு முன்பாகவே, இந்த மலை இருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது.



காவ்யகண்ட கணபதி முனிவர்

“அருணாசலத்தின் சந்தேசம்” (*Message from Arunachala*) என்னும் நூலில் ஸ்ரீ பால் பிரண்டன், இதற்கு ஆதாரமாக ஓர் அமெரிக்க பண்டிதரின் அபிப்பிராயத்தை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார். பூகோளத்தின் உள்ளே நிலக்கரிப் பாளங்கள் ஏற்பட்ட காலத்திற்கு முன்னாலேயே அருணாசல மலை இருந்திருக்கிறது என்று இப்பண்டிதர் கூறுகிறார்.

“இந்தக் கருங்கல் மலையின் காலம், கோடானு கோடி வருஷங்களுக்கு முற்பட்டதென்று அவர் அபிப்பிராயப்படுகிறார். பூகோளத்தின் ஆரம்ப காலத்துடன் இதன் சரித்திரம் தொடங்குகின்றது. தொன்மையான காலத்திலே உயிர் வாழ்ந்த தாவர, பிராணி வர்க்கங்களின் அடையாளங்களை முத்திரை ரூபமாக இன்று நமக்கு அறிவிக்கும் மணற்பாறைப் பிரதேசங்கள் ஏற்பட்ட காலத்திற்கும் முந்தியது. சரித்திர காலத்திற்கு முன்னே, சாவ்ரியன்ஸ் என்று அழைக்கப்படும் பிரும்மாண்டமான அமானுஷ்யப் பிராணிகள், மலை போன்று பெருத்த தங்களது உருவங்களை இழுத்துக் கொண்டு, பூர்வகால வனாந்தரங்களிலே ஊர்ந்து திரிந்த காலத்திற்கு முன்னேயே இம்மலை இருந்து வந்திருக்கிறது. இதுமட்டும் அல்ல. இப்பூமி உருவெடுத்த அன்றே அருணாசலமும் உண்டாயிற்று என்பது அவர் அபிப்பிராயம். கடலிலே மூழ்கி மறைந்துபோன லெமூரியாக் கண்டத்தின் எஞ்சிய பாகம் அருணாசலம்.”

புனித க்ஷேத்திரங்கள் யாவற்றினும் புனிதமானது உலகத்தின் இதயமாகிய அருணசலம் என்று ஸ்காந்த புராணம் கூறுகின்றது.



மலை நடை

"அக்னி ரூப ஸ்வரூபமாயினும், மலையின் வெளித் தோற்றம் சாந்தத்தைக் கொண்டிருப்பது, உலகத்தின் உய்வை உன்னிச் சுரக்கும் அருளையும் அன்பையும் குறிப்பதாகும். இங்கேதான் நான் பரிபூரணனாகச் சதா குடி கொண்டுள்ளேன். ஆகவே, உலகம் யாவையும் தன்னுள் அடக்கிய ஆத்ம ஜோதி, அருணசலத்தின் ஹிருதயத்திலே விளங்குகின்றது என்று தியானி," என்பது சிவபெருமானின் வாக்கு.

எத்தனையோ திவ்ய கணங்கள் இம்மலையில் சஞ்சரித்து வருகின்றன என்று மஹர்ஷி கூறியதாக ஸ்ரீ பிரண்டன் குறிப்பிடுகிறார். சித்துக்கள் விளையாடும் சித்த புருஷர் பலரும் இங்கு வசிப்பதாகவும், முதன் முதலில் திருவண்ணமலையை அடைந்தபோது இவர்கள் தன்னை அன்புடன் வரவேற்றதாகவும் மஹர்ஷிகள் கூறியுள்ளார்.

பத்து லக்ஷத்திற்கு மேற்பட்ட யாத்ரீகர்கள் கார்த்திகை தீபத்தின்போது திருவண்ணமலை தரிசனத்துக்கு வருகின்றனர். பௌர்ணமியன்று மாலை ஆறு மணிக்கு மலையுச்சியிலே உள்ள பெரிய தீபம் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்ததும், லக்ஷக்கணக்கான ஜனங்கள் சாஷ்டாங்கமாகத் தரையில் வீழ்ந்து "ஹரோ ஹரா" என்று கூவி அஞ்சலி செய்வர். தீபத்திலே இடப்படும் கற்பூரமும் நெய்யும் சேர்ந்து பல நாட்கள்வரை எரியும் ஜோதி, பல மைல்கள் வரை தென்படும்.

தூரத்துப் பார்வைக்கு கரடுமுரடான பாறை போலத் தோன்றினும், அருகில் சென்று பார்த்தால் மலையிலே பல அழகான காட்சிகள் தென்படும். காட்டு மிருகங்கள் வாழும் அடர்ந்த, அழகிய அடவிகளும் உண்டு. மஹர்ஷிகளுக்குத் தெரியாத இடம் மலை மீது ஒன்றுமில்லை. முற்காலத்தில், மஹர்ஷிகள் அடிக்கடி காட்டுக்குள் சென்று, பல நாட்கள் வரை இருந்து விட்டு வருவது உண்டு.

எல்லாவற்றையும் விட வனப்பு வாய்ந்த ஸ்தானம் ஒன்று மலை மீது உண்டு. மஹர்ஷிகள் இதைச் சுட்டிக் காட்டிய போதிலும், மற்ற



மதுரை ஜயந்தி

வர்களால் அதைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. வெகு அழகான இடம். வானுற உயர்ந்து, ஓரிலையில் ஒருவருண்ணுமாறு விரிந்த இலைகளையுடையதாய்ப் பருத்த பர்வதாகாரமான ஆல் முதலிய விருக்ஷங்களடர்ந்த ரமணீயமான இடம். இங்குதான் அருணாசல மஹா சித்தர் வாழ்ந்தனர் என்று கூறுவர்.

மலையுச்சியிலிருந்து பார்த்தால், இந்த மனோகரமான இடத்தைக் காணலாம். ஆனால், எத்தனையோ பக்தர்கள் அரும்பாடு பட்டும் இதன் உள்ளே பிரவேசிக்க முடியவில்லை. போகும் வழி அவ்வளவு கடினமானது. செங்குத்தான, வழுக்குப்பாறைகள் நிறைந்தது.



மலையைச் சுற்றி வர நல்ல பாதையிருப்பது, காலையிலும் மாலையிலும் கிரிப்பிரதக்ஷிணம் செய்வதற்கு சௌகரியமாயிருக்கிறது. மற்ற நாட்களை விட செவ்வாயன்று கிரிப்பிரதக்ஷிணம் செய்வோர் தொகை அதிகமாகும். மஹர்ஷிகள் கிரிப்பிரதக்ஷிணத்திற்குப் புறப்படும் போதெல்லாம் கூட்டம் ஏராளமாகிவிடும். இதைத் தவிர, ஒவ்வோரிடத்திலும், மஹர்ஷிகளைத் தங்கச்செய்து பிரசாதங்களைக் கிரகிக்குமாறு வேண்டும் ஜனங்களின் தொகையும் அதிகரித்து வந்ததால், ஒவ்வோர் சமயம், அந்த எட்டு மைலையும் சுற்றி வர பன்னிரண்டு மணி நேரத்திற்குமேல் ஆகிவிடும். கிரியைச் சுற்றி புண்ணிய தீர்த்தங்களும் ஆலயங்களும் பலவுண்டு. ஆதியில் ஸ்ரீ மஹர்ஷிகளே இந்த இடங்களில் இருந்திருக்கிறார். ஆகவே ஒவ்வோரிடத்திலும் பக்தர்கள் ஏராளமாகக் கூடி, மஹர்ஷிகளை வரவேற்று உபசரித்து பிரசாதத்தை அவர் முன்னிலையில் வினியோகிப்பது வழக்கம்.

இவ்வாறு கூட்டமும், மரியாதையும், தொந்தரவும் நாளுக்கு நாள் அதிகரிக்கவே, மஹர்ஷிகள் கிரிப்பிரதக்ஷிணத்தையே நிறுத்த வேண்டியதாயிற்று. சென்ற சில வருஷங்களாக கிரிப்பிரதக்ஷிணத்திற்கு செல்லுவதே கிடையாது.

ஆனால் மற்றோர் வழக்கம் மட்டும் மாறாமல் இன்றும் நடந்து வருகிறது. கார்த்திகை தீபத்தன்று மாலை, மலையை நோக்கியிருக்கும் மஹர்ஷிகளைச் சூழ்ந்திருப்பர் பக்தர். மலையுச்சியிலே தீபம் கொளுத்தினதும், மஹர்ஷிகளின் சன்னிதியிலே மற்றோர் சொக்கப்பானை கொளுத்தி, ஸ்ரீ அருணாசலரைப் போற்றி மஹர்ஷிகள் அருளியுள்ள அக்ஷரமணமாலையைப் பாடுவர். இச்சமயத்தில் ஏற்படும் தீவிரமான பக்தி வெள்ளத்தையும், உள்ளக் கிளர்ச்சியையும் ஓர் முறை அனுபவித்த பக்தர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் மறுமுறை இதற்கு வராமலிருப்பதில்லை.

அருணாசல அஷ்டகம் என்பது அருணகிரியைக் குறித்து மஹர்ஷிகள் அருளிய மற்றோர் பாடல். இதை தினந்தோறும் பல பக்தர்கள்

பாடிப் பாராயணம் செய்து வருகின்றனர்.

* * *

ஸ்ரீ மஹர்ஷிகளின் உபதேசங்கள் எவ்வளவு தூரம் பயன் அளித்திருக்கின்றன? நாட்டிற்கு விளைந்த நலன் யாது?

ரமணாஸ்ரமத்திலேயே இக்கேள்விகள் அடிக்கடி எழுவதுண்டு. இவற்றிற்குப் பதில் தேட வெகு தூரம் போகவேண்டியதில்லை.

உதாரணமாக ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரது வாழ்க்கையை எடுத்துக்கொள்ளுவோம். அவரைப் பித்தனென்று பலர் பரிகசித்த காலமும் உண்டு. ஆயினும், இன்று, உலகத்தை உய்வித்த உத்தமர்களில் ஒருவர் என்று அவரைக் கொண்டாடாதவர் கிடையாது. பரத நாட்டிற்கு பரமஹம்சர் அளித்த புதிய ஊக்கமும், ஆதர்சமும், இன்னும் ஐந்து நூற்றாண்டுகள் வரை நீடித்து நிற்கும், என்று இருபது ஆண்டுகளுக்குமுன் ஸ்ரீ அரவிந்தர் கூறினார். இன்று இதன் உண்மையை பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம்.



ஆத்மானுபூதிச் செல்வர்கள் அனைவரும் இத்தகைய நலனையே நாட்டிற்கு அளிக்கின்றனர். தன்னலமற்ற இப்பெரியோருக்கு, சகல நற்குணங்களும் சாதனமின்றித் தாமே வந்தடையும். இதெல்லாம் தவமுனிவர் இயல்பு.

ஸ்ரீ மஹர்ஷிகளிடம் ஜாதி மத பேதம் கிடையாது. அவருடன் நெருங்கிப் பழகி, பணிவிடை செய்த பக்தர்களில் தீண்டாதவர்களும் பலர் இருந்திருக்கின்றனர். இவர்களில் ஒரு முஸ்லீமும் உண்டு.

ஸ்திரீகளுக்கும், சூத்திரர்களுக்கும், ஞான மார்க்கத்தில் சம உரிமை உண்டு என்பது மஹர்ஷிகளின் துணிபு. வேத நூல்களைப் படிப்பதற்கும், ஆத்ம ஞானபோதம் பெறுவதற்கும், இவ்விரு சாராரும் அருகதையுள்ளவர்கள் என்று 1917-ம் ஆண்டிலேயே கூறியிருக்கிறார்.

சமூக சேவையும், உழைப்புமே சாந்திக்கு மார்க்கம் என்பது மஹர்ஷிகளின் கொள்கை.

ஆஶ்ரமத்தின் அன்றாட வாழ்க்கையில், தானே இதை அனுஷ்டித்துக் காட்டி வருகிறார்.

மௌனத்தின் மகிமையை மஹர்ஷிகள் அடிக்கடி வற்புறுத்தி உணர்த்துகிறார். ஆனால் அவர் கூறும் மௌன நிஷ்டை—சும்மாவிருத்தல்—வெறும் சோம்பேறித்தனம் அன்று.

"எண்ணங்கள் அற்ற சூன்ய நிலையும் அன்று அது. மலைபோல நின்று, சர்வ காரியங்களையும், சர்வ இயக்கங்களையும் தாங்கி நிற்கும் பரமசாந்தி அது.

"மேலும், தன்னைத்தானறிந்தோன், கல்லைப் போன்று உணர்வற்றுக் கிடப்பதில்லை. அப்படியானால், இந்த நிலைக்கும், ஆழ்ந்த கும்பகர்ணத் தூக்கத்திற்கும் வித்தியாசம் ஏது?

"நிஷ்டையில் மூழ்கிய பெரியோர் யாவரும், முக்தர்களும், சித்தர்களும், சும்மா விருந்ததில்லை. இப்போதும் அவர்கள் வேலை நடந்து கொண்டுதானிருக்கின்றது."

ஞான மார்க்கம் கிருகஸ்தர்களுக்கு ஏற்றதில்லையென்பதை மஹர்ஷிகள் ஒப்புக்கொள்ளுவதில்லை. "ஸ்ரீ ராமபிரானைவிட ஞானி வேறு உண்டோ? ஆயினும் அவர் கிருகஸ்தாஶ்ரம வாழ்க்கையை நடத்தி வரவில்லையா?" என்று சுட்டிக் காட்டுகின்றார்.

"சன்னியாசமென்பது நான் என்னும் சங்கற்ப த்யாகமேயன்றி, வெளி விஷயங்களை விடுவதல்ல. இந்த சன்னியாசமுள்ளவனுக்கு ஏகாந்தத்திலிருந்தாலும், அபார சம்சாரத்திலிருந்தாலும் ஒன்றாகவே தோன்றும்."

"ஞானம் சக்தியற்றதென்று எண்ணுபவன் ஒன்றுமே அறியாதவன்" என்று மஹர்ஷிகள் உபதேசிக்கிறார்.

> கிரியுருவாகிய கிருபைக் கடலே
> கிருபைகூர்ந் தருளுவாய் அருணாசலா.
>
> பொடியான் மயக்கியென் போதத்தைப் பறித்துன்
> போதத்தைக் காட்டினை அருணாசலா.
>
> சொல்லாது சொலிநீ சொல்லற நில்லென்று
> சும்மா விருந்தாய் அருணாசலா.
>
> திரும்பி அகந்தனைத் தினமகக் கண்காண்
> தெரியும் என்றனை என் அருணாசலா.
>
> வாவென்று அகம்புக்கு உன் வாழ்வருள் அன்றே என்
> வாழ் விழந்தேன் அருள் அருணாசலா.
>
> *   *   *
>
> நின்னையா னுருவென வெண்ணியே நண்ண
> நிலமிசை மலையெனு நிலையினை நீதா
> னுன்னுரு வருவென வுன்னிடின் விண்ணேக்
> குறவுல கலைதரு மொருவனை யொக்கு
> முன்னுரு வன்லற வுன்னிட முந்நீ
> ருறுசருக் கரையுரு வெனவுரு வோயு
> மென்னையா னறிவுற வென்னுரு வேறே
> திருந்தனை யருணவான் கிரியென விருந்தோய்.

"நிஷ்டையிலே தோன்றும் சக்தியை, சாதனத்தின் மூலம் எப்போதும் ஏற்படும்படி பழக்கலாம். பின், இந்த சக்தியின் மூலமே, ஒருவன் தனது வெளி வேலைகளைச் செய்து கொண்டு வரலாம். இரண்டிற்கும் இடையே முறிவு கிடையாது. இப்பேர்ப்பட்டவர்களுக்கு, நிஷ்டை நிலைக்கும் வெளி வேலைகளுக்கும் வித்தியாசமே தோன்றாது.

"நானார் என்ற விசாரணையிலிறங்கி, இந்த உடலும் நானல்ல, மனதும் நானல்ல, மனத்திலே தோன்றும் எண்ணங்களும் நானல்ல என்பதை உணர்ந்துவிட்டால், இந்த விசாரமே, உன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பதிலைக் கிளப்பும். ஆழ்ந்த ஆத்ம அனுபவமாக, தானே வந்து சேரும்.

"உன் உண்மையான சொரூபத்தை யறிந்தால், உள்ளக் கமலத்திலே, உண்மை சூரிய னொளிபோற் பளிச் சென்று பிரகாசிக்கும். துயரங்கள் நீங்கி, மனது நிர்மலமாகும். உண்மையான ஆனந்தம் பொங்கும். ஏனெனில், சுகமும் ஆத்ம உண்மையும் ஒன்றேயாம்."

"தன் உண்மை சொரூபத்தை அறியமாட்டாமல்தான், இவ்வுலகம் சுகமின்றித் தவிக்கின்றது," என்று கூறுகிறார் மஹர்ஷி.

"சுகம் என்பதே மனிதனின் இயற்கை. தன் உண்மையான சொரூபத்துடன் கூடப்பிறந்தது சுகம். இச்சுகத்தைத் தேடியலைபவன், தனக்கும் தெரியாமல், தன் உண்மை சொரூபத்தையே தேடுகிறவனாகிறான். உண்மை சொரூபம் அழிவற்றது; ஆகவே, அதை யறிந்தவன் என்றும் அழியாத நித்தியானந்தத்தை அடைகிறான்."

ஸ்ரீ ரமணாஸ்ரம பிரசுரங்கள்

1. ஸ்ரீ ரமண விஜயம் : ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் எழுதியது. தமிழ் நாட்டின் தவத் திலகமாய் விளங்கும் பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளின் திவ்ய சரிதமும் உபதேச தத்துவமும் அடங்கியது. ஆன்ம எழுச்சியை ஊக்கும் நடையில் எழுதப்பட்டுள்ளது. .... விலை ரூ. 2 0 0

2. ஸத்தர்சன பாஷ்யம் : ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அருளிய "உள்ளது நாற்பதின்" அனுவாதமாய் வாஸிஷ்ட கணபதி முனிவர் இயற்றிய ஸத்தர்சனத்திற்கு ஸ்ரீ கபாலி சாஸ்திரியார் எழுதிய ஒப்பற்ற பாஷ்யத்தின் மொழிபெயர்ப்பு.
விலை (போர்ட்) ரூ. 0 8 0
,, (ராப்பர்) ,, 0 6 0

3. ஸ்ரீ ரமண நூற்றிரட்டு : (இரண்டாம் பதிப்பு) : ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம், உபதேச நான்மாலை, அனுவாத நான்மாலை (செய்யுள்), அனுவாத நான்மாலை (வசனம்), அருண்மொழி தொகுப்பு, இவை அடங்கியது.
விலை ரூ. 1 0 0

4.	உபதேச மஞ்சரி	,,	0 1 0
5.	உபதேச சாரம் (நாகர ஸ்லோகமும் பாஷ்ய தமிழ் மொழிபெயர்ப்பும்)	,,	0 1 0
6.	ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம்	,,	0 0 6
7	ஸ்ரீ ரமணானந்த ஸ்தோத்திர பஞ்சகம்	,,	0 1 0
8.	நான் யார்? (ஆறாம் பதிப்பு)	,,	0 0 6
9.	உள்ளது நாற்பது (அனுபந்தத்துடன்) விரிவுரை	,,	0 6 0
10.	ஸ்ரீ ரமண தோத்திரம்	,,	0 0 6
11.	ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் (சரித்திரமும் உபதேச மொழிகளும்)		0 6 0

ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை.

ஸண்டே டைம்ஸ் புத்தகசாலையிலும்
கிடைக்கும்
(21, எரபாலு செட்டி தெரு, சென்னை.)

Sunday Times Press, Madras.